தமிழர் பொருண்மியம்
வாரமலர்
TAMILS ECONOMY

விலை - 50/=
இதழ் - 23
18.06.2023



இலங்கையில் இருந்து ஐரோப்பாவுக்கு ... 06

மண் வளமே நம் வளம் 13

பணத்தின் நிர்வாகம் ஏன் முக்கியமானது? 19

# முயற்சியும் திட்டமிடலும் இருந்தால் வியக்கத்தக்க அளவு சாதிக்கலாம்

தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ... 04



“எமது பொருளாதார வளத்தை நாங்கள் கட்டி எழுப்ப வேண்டுமாக இருந்தால் நாம் ஒவ்வொருவரும் நிச்சயமாக நமக்கான உணவுப் பொருட்களை விளைவிக்க வேண்டிய தேவை இருக்கிறது என்பதை நாங்கள் மறந்து விடக்கூடாது”

# முயற்சியும் திட்டமிடலும் இருந்தால் வியக்கத்தக்க அளவு சாதிக்கலாம்

நேர்கண்டவர் - ஞா.கவினி

“சரியான முயற்சியும் திட்டமிடலும் இருந்தால் விவசாயத்தில் வியக்கத்தக்க அளவு சாதிக்கலாம்” என்கிறார் வசாவிளான் குட்டியப்புலம் பிரதேசத்தில் விவசாயத்தில் சாதிக்கும் சண்முகம் கிருஷ்ணராஜா.

32 வருடங்களாகப் புலம்பெயர்ந்து சுவிஸ் நாட்டில் வாழ்ந்து வந்தாலும் தாய் நாட்டின் மீது அளவற்ற பற்றோடும் தனது ஒய்வு காலங்களை பயனுறச் செலவழிக்கும் ஆவலோடும் மீண்டும் தன் தாய் தேசத்தின் தற்சார்பு வாழ்க்கையில் தன்னை இணைத்துக் கொண்டிருக்கிறார்.

**முனைவு**

32 வருடங்களுக்கு பிறகு மீண்டும் தாய்மண்ணுக்கு திரும்பியபொழுது எனது ஓய்வு காலத்தினை மிகப் பயனுள்ள வழியில் செலவழிப்பதற்காக நான் தெரிவு செய்த துறை தான் விவசாயம். ஆரம்பத்தில் இருந்தே விவசாயப் பின்னணியில் உள்ள குடும்பத்தில் பிறந்து வளர்ந்து இருந்தாலும் நான் வெளிநாட்டில் இருந்த இந்த நீண்ட இடைவெளி ஒருவித அச்சத்தையே அளித்தது. ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தின் அச்சுவேலிப் பிரதேசத்தில் எனது முயற்சியை ஆரம்பித்தபோது அனேகம் எதிர்மறையான கருத்துக்களையே எதிர்கொள்ள வேண்டியிருந்தது. பல காலமாக சொந்த மண்ணில் விவசாயம் செய்து கொண்டிருந்தவர்களே நான் ஆரம்பித்து இருக்கின்ற விவசாய நடவடிக்கைகளை பற்றி அவ்வளவாகத் திருப்தி கொள்ளாதபொழுதும், நான் சோர்ந்து விடக்கூடாது என்ற ஒரு தன்னம்பிக்கையோடு அடுத்தடுத்த கட்டமாக ஓடிக் கொண்டே இருந்தேன். அந்த சலிப்பில்லாத ஓட்டங்கள் தான் விவசாயம் மீதான ஈடுபாட்டையும் விவசாயப் பட்டறிவையும் எனக்கு வழங்கியது எனலாம்.



விவசாயத்தில் சாதிக்கும் சண்முகம் கிருஷ்ணராஜா

**களநிலை**

சிறுகச் சிறுக விவசாயத்தில் எனக்கு பிடிப்பும் ஆர்வமும் ஏற்பட தொடங்கியது.. எத்தகைய சவால்களையும் எதிர்கொள்ள வேண்டும் என்கின்ற மன தைரியத்தோடு மீண்டும் யாழ்ப்பாணத்தின் பூர்வீக கிராமங்களில் ஒன்றான வசாவிளானில் எனது பண்ணையினை ஆரம்பித்தேன். உண்மையில் விவசாயம் செய்வது ஒரு கலை தான்... இதனை சரியான திட்டமிடலுடனும் முயற்சியுடனும் செய்தால் வெற்றி காண்பது சாத்தியமே. உண்மையில் தற்போது விவசாயத் திணைக்களங்களும் விவசாய போதனாசிரியர்களும் நமக்கு சரியான வழிகாட்டல்களை வழங்குகின்றனர். அரசிடமிருந்து கிடைக்கக்கூடிய அடிப்படை விவசாயத்திற்கான உதவிகளையும், வங்கிக் கடன்களையும் பெற்றுக்கொள்ளக் கூடிய வசதியும் இப்போது இருக்கிறது.. தற்போதைய நாட்டின் பொருளாதார நிலை கருதி விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டிய நிலையில் அனைவரும்

இருக்கிறோம்.

எமது பொருளாதார வளத்தை நாங்கள் கட்டி எழுப்ப வேண்டுமாக இருந்தால் நாம் ஒவ்வொருவரும் நிச்சயமாக நமக்கான உணவுப் பொருட்களை விளைவிக்க வேண்டிய தேவை இருக்கிறது என்பதை நாங்கள் மறந்து விடக்கூடாது.

### சவால்களும் வாய்ப்புக்களும்

ஆரம்பத்தில் விவசாயிகளுக்கு இருக்கக் கூடிய மிகப்பெரிய பிரச்சினை மனிதவலு தான். இலங்கையை பொறுத்தவரையில் தோட்டத்தில் வேலை செய்பவர்களுக்கான நாள் கூலி அல்லது நேரம் பற்றி சரியான திட்டம் இல்லை . விவசாயிகள் இடுகின்ற முதலீடுகளில் மிக அதிகச் செலவீனமாக இருப்பது வேலைக்கான சம்பளம் தான். ஆனாலும் வேலைக்கு ஆட்கள் கிடைப்பதும் முயல் கொம்பாகத்தான் இருக்கிறது.



உண்மையிலேயே எனக்கு இருந்த ஆகப் பெரிய சவால் என்றால், சரியான வேலையாட்களை அமர்த்துவது தான். இந்தப் பிரச்சினைகளை எப்படி தீர்க்க வேண்டும் என்று யோசித்தபோது தான் வேலைக்கு ஆட்கள் கிடைக்காத பட்சத்தில் பயன்படுத்துவதற்கு என்று என்னுடைய சொந்த யுக்தியோடு சில உபகரணங்களை உருவாக்கினேன். வளர்ந்த நாடுகளில் பரவலாக இயந்திரங்கள் புழக்கத்தில் இருந்தாலும் நமது நாட்டில் நமது சொந்த மூளையில் தயாரான இந்த இயந்திரங்களுக்கு எப்போதுமே தனி மதிப்பும் மரியாதையும் இருக்கிறது. பொறியியல் துறையை கற்றுத் தேர்ந்த பல நிபுணர்கள் மற்றும் கண்டுபிடிப்புகளை செய்தவர்கள் எங்களோடு இருக்கிறார்கள். ஆனால் இவர்களை வெறுமனே விவசாயிகளாக மட்டும் அன்றி ஒரு நல்ல கண்டுபிடிப்பாளர்களாகப் புதிய உற்பத்திகளை செய்பவர்களாக நாங்கள் ஏன் மாற்றக்கூடாது?

சொந்த நாட்டிலேயே எங்களுக்கு தேவையான உபகரணங்களை நாங்கள் உற்பத்தி செய்வதென்பது நமது நாட்டின் பொருளாதாரத்திற்கு பல மடங்கு உத்வேகம் அளிக்கக் கூடிய செயலாக இருக்கும் என்று நம்புகிறேன்.

இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வரவேண்டும் என்று அவர்களிடம் கோரிக்கை வைத்திருக்கிறேன்.

உண்மையில் ஆரம்பத்தில் வேலையாட்களை வைத்து செய்து முடித்த வேலைகளை தற்போது மிகச் சுலபமாக இயந்திரங்களால் செய்து முடிக்க முடிகிறது. பாதிக்கு பாதிச் செலவுகளும் குறைகிறது. முடிந்தவரை ஒவ்வொருவரும் கிடக்கின்ற காணி துண்டுகளில் ஒரு சிறு அளவிலேனும் விவசாயம் செய்ய ஆரம்பித்தால் அனைவரும் சொந்த காலில் நிற்க முடியும். வீட்டின் பொருளாதாரத்தோடு நாட்டின் பொருளாதாரத்தையும் வளப்படுத்துவதற்கு விவசாயிகளால் முடியும் என்று உறுதியாக நாங்கள் நம்ப வேண்டும்.

### கண்டுபிடிப்புகள்

களைநீக்கி இயந்திரம் மற்றும் வெங்காயத்தை நடுவதற்கான இயந்திரம் என்பவற்றை உற்பத்தி செய்து பயன்படுத்தி வருவதோடு தற்போது வெங்காயத்தை அறுவடை செய்வதற்கான இயந்திரத்தையும் உற்பத்தி செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறேன். மிகவும் வெற்றிகரமான உற்பத்திகள் இருந்தாலும் இவற்றிற்கான அங்கீகாரத்தை என்னால் பெற முடியுமா என்று தெரியவில்லை.

சில நாடுகளில் இப்படிப்பட்ட இயந்திரங்கள் பாவனையில் இருக்கின்றன. ஆனால் அவற்றை உள்ளி போன்ற பொருட்களை பயிரிடுவதற்காக தான் பயன்படுத்தியிருக்கிறார்கள். வெங்காயத்தை நடுவதற்கான இயந்திரத்தைக் கண்டுபிடித்தது இதுதான் முதல் தடவை என்று நினைக்கிறேன்.





இப்படிப்பட்ட உபகரணங்களைக் கண்டுபிடித்து உற்பத்தி செய்பவர்களை உற்சாகப்படுத்தி எமது நாட்டின் வளங்களை பயன்படுத்திக் கொள்வதற்கு உரியவர்கள் நிச்சயமாக செயல்பட வேண்டும். அதற்கான கோரிக்கைகளை விவசாயிகளும் முன்வைக்கவேண்டும். நவீன மாற்றங்கள் நமது விவசாயத்தில் பெருத்த நன்மைகளை கொண்டு வரும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

### ஆலோசனை

இன்றைக்கு இங்கே விவசாயத்தின் பால் ஈர்க்கப்படுகின்ற இளைஞர்களுக்கும் அல்லது விவசாயத்தை செய்வதன் மூலம் பொருளாதாரத்தை ஈடு செய்ய முடியுமா? என்று பயப்படுகின்றவர்களுக்கும் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். உங்கள் திடமான முயற்சிக்கும் சரியான திட்டத்திற்கும் நியாயமான வெற்றி நிச்சயம் கிடைக்கும். விவசாயத்தைப் போல் சுதந்திரமான மற்றும் சந்தோஷமான தொழில் வேறு எதுவும் இருக்க போவதில்லை என்று நான் நினைக்கிறேன். ஆகவே நாங்கள் உண்கின்ற எங்கள் உணவுகளை நாங்கள் உற்பத்தி செய்ய வேண்டிய தேவையையும் அதன் கட்டாயத்தையும் நிச்சயமாக நாங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். எல்லா வளமும் நிறைந்து இருக்கின்ற இந்த நாட்டிலே விவசாயம் செய்வதென்பது அத்தனை அற்புதமான விஷயம் தான். சவால்களை எல்லாம் சாதனையாகக் கொண்டு முன்னேறத் துடிக்கும் உங்களுக்கு எனது வாழ்த்துக்கள் என்கிறார் இளம் விவசாயிகளுக்கு முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் திகழும் விவசாயப் பண்ணை ஒன்றின் உரிமையாளரும் விவசாய உபகரண உற்பத்தியாளருமான சண்முகம் கிருஷ்ணராஜா அவர்கள்.

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0764438620

## பொருளாதார நெருக்கடியும் சிறுவர்களின் நிலைமையும்

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார மற்றும் சமூக நிலைமையைக் கருத்திற் கொண்டு சிறுவர்கள் கூலித் தொழிலாளர்களாக பயன்படுத்தப்படும் அபாயம் காணப்படுவதாகத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை எச்சரிக்கை விடுத்துள்ளது. இது வெறுமனே ஒரு செய்தியாக கடந்து சென்றுவிடக்கூடிய விடயமல்ல. நாட்டில் அனைத்து மட்டங்களிலும் காணப்படும் நிலைமைகளையும், பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் இடைவிலகும் தொகை அதிகரித்திருப்பதையும் கருத்திற்கொண்டே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

ஒரு வருடத்துக்கு மேலாகத் தொடரும் பொருளாதார நெருக்கடியும், அதற்கு முன்னர் கொவிட் பெருந்தொற்றினால் ஏற்பட்ட பாதிப்புக்களும் சிறுவர்களைத்தான் மோசமாகப் பாதித்தன. சிறுவர்களின் கல்வி, போஷாக்கு நிலை மற்றும் உளவியல் ரீதியாக ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் அவர்களின் எதிர்காலத்தை மட்டும் பாதிக்கப்போவதில்லை. நாட்டின் எதிர்காலத்தையும் பாதிக்கக்கூடியவை. அதனால், இவ்விடயத்தில் விஷேட கவனம் செலுத்த வேண்டிய அவசரத் தேவை அரசாங்கத்துக்கும் சமூகத்துக்கும் இருக்கின்றது.

பாடசாலைகளை விட்டு இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும், பாடசாலைக்குத் தொடர்ச்சியாக அனுப்பாமல் இருப்பதற்கான சாத்தியக்கூறுகளும் அதிகளவில் அவதானிக்க முடிவதாகவும் அந்த அதிகாரசபை சுட்டிக்காட்டியிருப்பது கவனிக்கத்தக்கது. கணிசமான மாணவர்கள் காலை ஆகாரத்தைக் கூடப் பெறமுடியாதவர்களாகப் பாடசாலைகளுக்கு வருகின்றார்கள். பாடசாலை இடைவிலகலுக்கு இது மட்டுமன்றி, உச்சத்துக்குச் சென்றிருக்கும் கற்றல் உபகரணங்களின் விலையும் ஒரு காரணமாகவுள்ளது. இவ்வாறு இடைவிலகும் மாணவர்கள் கூலித் தொழிலாளிகளாக செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய சட்டத்தின்படி, 16 முதல் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களை அவர்களின் வாழ்க்கை, சுகாதாரம், கல்வி அல்லது தார்மீக வளர்ச்சிக்கு ஆபத்தில்லாத பணிகளில் மட்டுமே அமர்த்த முடியும். மேலும் அந்தச் சிறுவர்களைப் பாதுகாப்பற்ற வேலைகளில் அமர்த்துவதும், இரவு நேரங்களில் பணிக்கு அமர்த்துவதும் சட்டவிரோதமானதாகும். இருந்த போதிலும், பொருளாதார நெருக்கடி காரணமாக அதிகளவான சிறுவர்கள் பணிக்கு அமர்த்தப்படும் அபாயம் காணப்படுவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு பகல் போசனத்தை வழங்குவதன் மூலமாக இடைவிலகலைத் தடுப்பதற்கு பல சமூக அமைப்புக்கள் கூட முன்வந்து செயற்படுகின்றன. அரசாங்கம் மட்டுமன்றி, பொது அமைப்புக்களும் இவ்விடயத்தில் தமது பங்களிப்பை ஆரோக்கியமான முறையில் வழங்க முடியும் என்பதற்கு இவ்வாறான பல முன்னுதாரணங்கள் காணப்படுகின்றன. பெற்றோரும் இவ்விடயத்தில் அதிக பொறுப்புடன் செயற்படுவதன் மூலமாகவே எமது எதிர்கால சந்ததியின் கல்வியைப் பாதுகாக்க முடியும்.

# அன்புள்ள ஆசிரியருக்கு...




### டொலர் பெறுதி குறைவடைவு

டொலரின் பெறுமதியில் மாற்றம் ஏற்படுவது தொடர்பாக கடந்த வாரம் நீங்கள் வெளியிட்டிருந்த கலாநிதி எம்.கணேசமூர்த்தியின் நேர்காணல் மிகவும் பயனுள்ளதாக இருந்தது. டொலரின் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்களுக்கான காரணம் என்ன என்பதையிட்டோ, அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களையிட்டோ சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்த எம்போன்றவர்களுக்கு இந்த நேர்காணல் மிகவும் பயனுள்ளதாக இருந்தது. குறிப்பாக தங்க நகைகளைக் கொள்வனவு செய்வதற்கு இது உகந்த காலமா? என்ற கேள்விக்கான அவரது பதில் எம்மைப்போல நகைகளை வாங்குவதில் ஆர்வம் உள்ளவர்களுக்கு பயனுள்ளதாக இருந்தது.

**குமுதினி கந்தராஜா - பம்பலப்பிட்டி, கொழும்பு.**

### "ராவணா சீக்கிரட்" சுற்றுலா மையம்

பண்டாரவளையில் அமைந்திருக்கும் "ராவணா சீக்கிரட்" என்ற சுற்றுலா மையம் தொடர்பாகக் கடந்த வாரம் நீங்கள் வெளியிட்டிருந்த கட்டுரை சுவாரஸ்யமானதாகவும், பயனுள்ளதாகவும் இருந்தது. எம்மைப்போன்ற சுற்றுலா செல்வதில் ஆர்வம் உள்ளவர்களுக்கும், அது குறித்த தகவல்களை விரும்பிப் படிப்பவர்களுக்கும் தேவையான தகவல்களை இந்தக் கட்டுரை மூலமாக அறிந்துகொண்டோம். எமது நாட்டிலேயே இவ்வாறான பல சுற்றுலா மையங்கள் இருக்கின்ற போதிலும், அவை தொடர்பாக எம்மால் பத்திரிகைகள் மூலமாக அறிந்துகொள்ள முடியாதுள்ளது. இது போன்ற கட்டுரைகளைப் பொருண்மியம் தொடர்ந்து வெளியிடுமாக இருந்தால் எம்மைப்போன்றவர்களுக்கு அது பயனுள்ளதாக இருக்கும்.

**எம்.ரவிச்சந்திரன் - கண்டி**

**தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ...**

சந்தாதாரராகுங்கள்!

* **மூன்று மாதங்களுக்கு 1,300 ரூபா தபால் செலவு உட்பட**
* **ஆறு மாதங்களுக்கு 2,600 ரூபா தபால் செலவு உட்பட**

சந்தாத் தொகையை **Green media House (Pvt) Ltd** என்ற பெயரில், **HNB Bank - Jaffna Metro branch - 016010023281** கணக்கு இலக்கத்துக்குச் செலுத்தி, அதற்கான பிரதியுடன் கீழேயுள்ள படிவத்தையும் நிரப்பி வாட்ஸ்அப் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்.

மறு வாரத்திலிருந்து தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வரும்!

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி -

**Green media House (Pvt) Ltd,**
**68, crossette lane, Jaffna.**

**வாட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் - 0777 276 949**

---

**தமிழர் பொருண்மியம் - சந்தாப் படிவம்**

**பெயர்** - --------------------------------------------------------
**முகவரி** - -----------------------------------------------------
**தொலைபேசி இலக்கம்** - ------------------------------------
**சந்தாக் காலம்** - ----------------------------------------------
**செலுத்திய தொகை** - -----------------------------------------
**செலுத்திய திகதி** - --------------------------------------------




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,54,750 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,68,750 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**



# கேளுங்கள் தரப்படும்

**கேள்வி -** டொலர் உட்பட வெளிநாட்டு நாணயங்களின் பெறுமதி கடந்த வாரம் பெருமளவுக்குக் குறைவடைந்தது. இப்போது மீண்டும் கிடுகிடுவென உயர்ந்திருக்கின்றது. இது எதனால்?

**ஆர்.பரானந்தன்,**
**வெள்ளவத்தை.**

**பதில் -** உண்மைதான். இது தொடர்பாக கடந்த வாரம் பொருணமியம் வார இதழில் பேட்டிக் கட்டுரை ஒன்றையும் வெளியிட்டிருந்தோம். அரசாங்கம் 300 க்கும் அதிகமான பொருட்களுக்கான இறக்குமதித் தடையை நீக்கியிருப்பதால், டொலரின் பெறுமதி மீண்டும் அதிகரிக்கும் என அதில் தெரிவித்திருந்தோம். அது போலத்தான் நடந்திருக்கின்றது. குறிப்பிட்ட பொருட்களை இறக்குமதி செய்வதற்காக அதிகளவு டொலர் வெளியே செல்லும் போது அதற்கான கேள்வி அதிகரிக்கின்றது. அதனால், அதன் பெறுமதி கூடுகின்றது. அரசாங்கம் அவசரப்பட்டு இந்த தடை நீக்கத்தைச் செய்திருக்கத் தேவையில்லை என்பதுதான் பொருளாதார நிபுணர்களின் கருத்து. அரசிடம் உறுதியான பொருளாதாரக் கொள்கை இல்லாததன் பிரதிபலிப்புத்தான் இந்தத் தளம்பல்.

---

**கேள்வி -** உள்நாட்டுக்கடன் மறுசீரமைப்பால் வங்கி வைப்புக்கள், ஈ.பி.எப். போன்றவற்றுக்குப் பாதிப்பு ஏற்படுமா?

**எம்.புவனேஸ்வரி,**
**வட்டுக்கோட்டை**

**பதில் -** உள்நாட்டுக் கடன்களாக சுமார் 42 பில்லியன் டொலர் பெறப்பட்டுள்ளது. இதில் ஈ.பி.எப். மற்றும் வங்கிகளிடமிருந்து பெற்ற கடன்கள் கணிசமான தொகை என்பதால் அதில் பாதிப்பு ஏற்படலாம் என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது. கடன் மறுசீரமைப்பைச் செய்யும் போது மொத்த கடனில் 30 வீதத்தை வெட்டிக் குறைக்க வேண்டும் என்பதுதான் இலக்காக இருக்கும் எனப் பொருளாதார நிபுணர்கள் சொல்கின்றார்கள்.

இவ்வாறு செய்வதாயின் குறிப்பிட்ட நிறுவனங்களுடன் பேச்சுக்களை நடத்தி அவர்களுடைய சம்மதத்தைப் பெறுவது அவசியம். ஆனால், வங்கி வைப்புக்களிலோ, ஈ.பி.எப். போன்றவற்றிலோ கை வைக்கப்படாது என அரசாங்கத் தரப்பில் சொல்லப்பட்டுவருகின்றது. ஆனால், இந்தக் கடன் மறுசீரமைப்பை எதிர்வரும் செப்டெம்பருக்கு முன்னர் செய்ய வேண்டும்.

அரசாங்கம் தன்னுடைய திட்டம் என்பதை வெளிப்படையாகத் தெரிவிக்கும் வரை, வதந்திகளும் ஊடகங்களும் வெளிவருவதைத் தவிர்க்க முடியாதுதான். எப்படியிருந்தாலும் இன்னும் இரண்டு மாதங்களுக்குள் தனது திட்டம் என்ன என்பதை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டியிருக்கும்.

## கேளுங்கள் தருகின்றோம்

தமிழர் பொருணமியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி -
tamilseconomy@gmail.com




| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 200/= |
| பச்சைமிளகாய் | - 400/= |
| தக்காளி | - 260/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 200/= |
| கோவா | - 300/= |
| கரட் | - 350/= |
| பூசணி | - 100/= |
| புடோல் | - 130/= |
| வாழைக்காய் | - 100/= |
| சின்ன வெங்காயம் | - 300/= |
| பெரிய வெங்காயம் | - 130/= |
| பாகற்காய் | - 450/= |
| வெண்டக்காய் | - 150/= |
| கருணைக்கிழங்கு | - 130/= |
| பயற்றங்காய் | - 400/= |
| லீக்ஸ் | - 320/= |
| பீற்றூட் | - 400/= |
| கறிமிளகாய் | - 380/= |
| முருங்கைக்காய் | - 1500/= |
| போஞ்சி | - 550/= |
| கத்தரி - தம்புள்ள | - 150/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 210/= |
| கனடா டொலர் - | 231/= |
| சீன யுவான் - | 42/= |
| யுரோ - | 335/= |
| ஜப்பான் யென் - | 2.2/= |
| சிங்கப்பூர்டொலர் - | 230/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 392/= |
| சுவிஸ் பிராங் - | 342/= |
| அமெரிக்க டொலர் - | 311/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 224/= |
| கனடா டொலர் - | 247/= |
| சீன யுவான் - | 46/= |
| யுரோ - | 356/= |
| ஜப்பான் யென் - | 2.3/= |
| சிங்கப்பூர் டொலர் | 245= |
| ஸ்ரோலிங் பவுண் - | 417/= |
| சுவிஸ் பிராங் - | 366/= |
| அமெரிக்க டொலர் - | 328/= |



# இலங்கையிலிருந்து ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய பொருட்கள்

**“இலங்கை அன்னாசி, மாம்பழம், பப்பாளி, மற்றும் வெண்ணெய் உட்பட வெப்பமண்டல பழங்கள் மற்றும் காய்கறிகளை பரவலாக உற்பத்தி செய்கிறது. இந்தத் தயாரிப்புகள் ஐரோப்பாவில் சாத்தியமான சந்தையைக் கொண்டுள்ளன.”**

இந்தக் கட்டுரையானது பல கட்டுரைகளை கொண்ட ஒரு தொகுப்பின் சிறு பகுதியாகும். இலங்கையின் விவசாயத் துறையினை ஏற்றுமதி நோக்கி நகர்த்துவதற்கு தடையாக உள்ள பல காரணிகளை அறிந்து கொண்டு தீர்வு காண முயற்சிக்கும் ஒர தேடலாகும்.

இந்தப் பதிவில் இலங்கையிலிருந்து ஐரோப்பாவிற்கு எப்போதும் ஏற்றுமதி செய்யக்கூடிய 15 விவசாயப் பொருட்களை பட்டியலிட்டு உள்ளோம்.

### தேயிலை

உலகின் மிகப்பெரிய தேயிலை ஏற்றுமதியாளர்களில் இலங்கையும் ஒன்றாகும். மேலும் இலங்கை தேயிலைக்கான குறிப்பிடத்தக்க சந்தையாக ஐரோப்பா உள்ளது. உயர்தர நிலையான உற்பத்தித் தேயிலைக்கான தேவை ஐரோப்பாவில் அதிகரித்து வருகிறது. மேலும் இலங்கை தனது உயர்தர சிலோன் தேயிலையை ஊக்குவிப்பதன் மூலம் இந்தப் போக்கைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

2020 ஆம் ஆண்டில், இலங்கை சுமார் 117,000 தொன் தேயிலையை ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதி செய்துள்ளது, இதன் மதிப்பு சுமார் 195 மில்லியன் யூரோக்கள்.

### மசாலாப் பொருட்கள்

இலவங்கப்பட்டை மிளகு, ஏலக்காய் உள்ளிட்ட உயர்தர மசாலாப் பொருட்களுக்கும் இலங்கை அறியப்படுகிறது. சேதன மற்றும் நியாயமான-வர்த்தக மசாலாப் பொருட்களுக்கான ஐரோப்பியச் சந்தை வளர்ந்து வருகிறது. மேலும் இலங்கை தனது நிலையாக உற்பத்தி செய்யப்படும் மசாலாப் பொருட்களை ஊக்குவிப்பதன் மூலம் இந்தச் சந்தையைப் பயன்படுத்த முடியும்.

2020 ஆம் ஆண்டில், இலங்கை சுமார் 10,000 தொன் மசாலாப் பொருட்களை ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதி செய்தது, அதன் மதிப்பு சுமார் 28 மில்லியன் யூரோக்கள்.

### பழங்கள் மற்றும் காய்கறிகள்

இலங்கை அன்னாசி, மாம்பழம், பப்பாளி, மற்றும் வெண்ணெய் உட்பட வெப்பமண்டல பழங்கள் மற்றும் காய்கறிகளை பரவலாக உற்பத்தி செய்கிறது. இந்த தயாரிப்புகள் ஐரோப்பாவில் சாத்தியமான சந்தையைக் கொண்டுள்ளன. குறிப்பாக கவர்ச்சியான மற்றும் உயர்தரத் தயாரிப்புகளைத் தேடும் நுகர்வோருக்கு.

2020 ஆம் ஆண்டில், இலங்கை சுமார் 18,000 தொன் புதிய பழங்கள் மற்றும் காய்கறிகளை ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதி செய்துள்ளது, அதன் மதிப்பு சுமார் 20 மில்லியன் யூரோக்கள்.

### தேங்காய் அடிப்படையிலான பொருட்கள்

இலங்கையில் தேங்காய் ஒரு முக்கிய விவசாய உற்பத்தியாகும். மேலும் ஐரோப்பாவில் தேங்காய் அடிப்படையிலான பொருட்களுக்கான தேவை அதிகரித்து வருகிறது. குறிப்பாக தேங்காய் பால், கிரீம்

# வரி விளம்பரம் — classified advertisement




## வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுச் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேர, பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு - 0777277009

---

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.
தொடர்புகளுக்கு - 0766482303

---

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்பு தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

---

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு 0767403814

---

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினை கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்கு கணக்கு உதவியாளர் (Account Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்கு பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.
தொடர்புகளுக்கு 0777299386

---

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்கு சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

---

விளம்பரம் சேகரிப்பாளர் (**Advertisement Collector**) முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

---

வாகன சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு 0770684905

---

## விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சி கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாண சுவையுடனான கோப்பிகள் 100g **Tin**களில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு 0764438620

---

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்து சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே.
தொடர்புகளுக்கு - 0766482303

---

வீட்டுத் தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

---

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

---

புரோட்டின் நிறைந்த கச்சான் லட்டுக்களை பெற்றுக்கொள்வதற்கு - 0777421896 கிளிநொச்சி.

---

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகைப் பொருட்களை பெற்றுக் கொள்ள - 779151820 கிளிநொச்சி.

---

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயை பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

---

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு
- 0773972309 மன்னார்.

---

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தொடர்புகொள்ளவும் - 0776126448



## வரி விளம்பரம் classified advertisement




பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகளை மிகத் தரமானதாகவும் குறைந்த விலையிலும் பெற்றுக் கொள்ள அழையுங்கள். - 0772034807

-------------------------------------

கிளிநொச்சியில் நியாயமான கட்டணத்தில் வடி ரக வாகனத்தை வாடகைக்கு அமர்த்தலாம். - தொடர்புகளுக்கு - 0776199969

-------------------------------------

ஆரோக்கியமான சிறந்த சருமத்தையும் அழகையும் முகப்பொலிவையும் பெற்றுக்கொள்வதற்கு மூலிகை மூலம் தயாரிக்கப்பட்ட சவர்க்காரங்களை பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கலாம். எங்களது உற்பத்திகளுக்கு நாங்களே உத்தரவாதம். 0763352782

-------------------------------------

நீங்கள் ஒரு தொழிலைத் தொடங்குவதற்கு ஆர்வமாக இருக்கிறீர்களா? எப்படி தொழிலை ஆரம்பிப்பது என்ற குழப்பம் உங்களுக்கு இருக்கிறதா? இன்றே எங்களை நாடுங்கள். உங்களது முதலீட்டிற்கு ஏற்ப சிறந்த வியாபாரத் திட்டத்தினை உருவாக்கி தருவதோடு தொழில் தொடர்பான ஆலோசனைகளையும் உங்களுக்கு வழங்க முடியும். - 0753780530

-------------------------------------

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய தரத்திலான கருவாடுகளை பெற்றுக் கொள்வதற்கு அழைக்கவும்.
0778412785

-------------------------------------

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட சிறந்த ஔடதங்களைப் பெற்றுக் கொள்வது எங்களை அழைக்கவும்
0766996628

-------------------------------------

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிக்சிகளுக்குரிய (கிரைண்டர்) பாட்ஸ்களும் (Parts), சைக்கிள் (Cycle) உதிரிப்பாகங்களும் (Parts) மொத்தமாக விற்பனைக்குள்ளது.

தொடர்புகளுக்கு - 077 6566508.

-------------------------------------




### காணி விற்பனைக்கு

மலையகத்தில் அப்புத்தளை நகரிற்கு அருகில் 20 பேர்ச் - 40 பேர்ச் காணிகள் விற்பனைக்கு. விடுமுறை வீடு, விடுமுறை விடுதி ஆகியவை அமைக்க ஏற்ற சூழல். மண்சரிவு மற்றும் வனவிலங்கு அபாயம் அற்ற பகுதி. பாதுகாப்பு, பராமரிப்பு, உரிய அனுமதிகள் என்பன ஏற்பாடு செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு 0777435557

-------------------------------------

A9 வீதியில் இருந்து 1km தூரத்தில் எழுதுமட்டுவாழ் - நாகர்கோவில் வீதியில் 2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு. இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுக் காலத்தினை அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு ஏற்ற இடம். தொடர்புகளுக்கு 0779789177

-------------------------------------



### தேவை

மூலிகைத் தோட்டம் ஒன்றை மேற்பார்வை செய்வதற்கு ஓரளவு மூலிகைகளைப் பற்றி அறிவும் தேக ஆரோக்கியமும் உள்ள ஒருவர் தேவை - 0772034807

-------------------------------------

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபலமான பத்திரிகை நிறுவனத்திற்குச் சந்தைப்படுத்தல் முகாமையாளர் தேவை - 773078799

-------------------------------------

திருநெல்வேலியில் உள்ள அப்பக்கடை ஒன்றிற்கு அப்பம் சுடுவதற்கு ஒருவர் தேவை. சம்பவம் பேசித் தீர்மானிக்கலாம். 077 118 1590

-------------------------------------

பண்ணை வேலைக்கு ஆள் தேவை. சம்பளமாக சுமார் 55,000/= வீடு கொண்டு செல்லக்கூடியதாகவும் EPF&ETF முழுவதும் எம்மால் கட்டப்படுவதுடன் உணவும் எம்மால் வழங்கப்படும். (தங்கி நின்று வேலைசெய்வதுடன் மாத விடுமுறையில் வீடு சென்று வரலாம்) தொடரபுக்கு 0773024473

-------------------------------------

இயந்திர மூலம் குழாய்க் கிணறு அமைத்து தரப்படும்.
0775652282

-------------------------------------

கிளிநொச்சி - அக்கராயனில் சோளன் பொத்திகளைச் சந்தைப் படுத்த முடியாமல் விவசாயி, கிருஸ்ணபிள்ளை கரன் என்பவர் அவதிப்படுகிறார். இன்னும் ஐயாயிரம் (5000) பொத்திகள் அவரிடம் உண்டு. தேவைப்படுபவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளுங்கள்.

Krishnapillai Karan - 773853765

-------------------------------------



### கல்வி

இம் முறை க.பொ.த(சா.த) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான தமிழ் மொழி பாடத் துரித மீட்டல் புலனக்குழுவில்(WhatsApp group) இணைய அனுமதிக்கட்டணம் 500/= மட்டுமே! [இலவச வகுப்புகள்- வரையறையற்ற கற்றல்- வித்தியாசமான கற்றல்- நவீன கற்றல்- எதிர்பார்க்கும் பெறுபேறு உறுதி.

தொடர்புகளுக்கு: - அ.வே.கோகிலன் - 94717326587

-------------------------------------

சிறந்த இசையமைப்பாளரால் ஒகன் வாத்தியம்கற்பிக்கப்படுகிறது. - 0772469113



மற்றும் எண்ணெய்.

2020 ஆம் ஆண்டில், இலங்கை ஏறத்தாழ 29,000 தொன் தேங்காய் உற்பத்திகளை ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதி செய்துள்ளது, இதன் மதிப்பு சுமார் 62 மில்லியன் யூரோக்கள்

### சேதன விவசாயம்

சேதன விவசாயப் பொருட்களுக்கு ஐரோப்பா ஒரு குறிப்பிடத்தக்க சந்தையாகும். மேலும் இலங்கை வளர்ந்து வரும் சேதன விவசாயத் துறையைக் கொண்டுள்ளது. இலங்கை உற்பத்தியாளர்கள் தங்கள் நிலையான முறையில் உற்பத்தி செய்யப்படும் சேதன விவசாய பொருட்களை ஊக்குவிப்பதன் மூலம் ஐரோப்பிய கரிம சந்தைக்குள் நுழைய முடியும்.

### கடல் உணவு

இலங்கை ஒரு செழிப்பான கடல் உணவுத் தொழிலைக் கொண்டுள்ளது. மேலும் ஐரோப்பாவில் நிலையான ஆதாரக் கடல் உணவுகளுக்கான தேவை அதிகரித்து வருகிறது. டுனா, இறால் மற்றும் நண்டு போன்ற இலங்கையின் கடல் உணவுப் பொருட்கள் ஐரோப்பாவில் ஒரு சந்தையைக் கண்டறிய முடியும்.

### மலர்கள்

ஆர்க்கிட், அந்தூரியம் மற்றும் ரோஜாக்கள் உட்படப் பலவகையான பூக்களை வளர்ப்பதற்கு இலங்கை சாதகமான கால நிலையைக் கொண்டுள்ளது. வெட்டப்பட்ட பூக்களுக்கான ஐரோப்பிய சந்தை குறிப்பிடத்தக்கது. மேலும் இலங்கை உற்பத்தியாளர்கள் உயர்தரப் பூக்களை ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்ய முடியும்.

### வெட்டப்பட்ட மலர்கள்

இலங்கையில் வளர்ந்து வரும் வெட்டப்பட்ட பூ தொழில் உள்ளது. மேலும் உயர்தர வெட்டு மலர்களை ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்யும் சாத்தியம் உள்ளது. வெட்டப்பட்ட பூக்களுக்கான ஐரோப்பியச் சந்தை குறிப்பிடத்தக்கது. மேலும் இலங்கை உற்பத்தியாளர்கள் தங்களின் தனித்துவமான மற்றும் கவர்ச்சியான பூக்களை ஊக்குவிப்பதன் மூலம் இந்தச் சந்தைக்குள் நுழைய முடியும்.

### NUTS

இலங்கை முந்திரிப் பருப்பின் முக்கிய உற்பத்தியாளராக உள்ளது. மேலும் ஐரோப்பாவில் நிலையான முறையில் உற்பத்தி செய்யப்படும் முந்திரிப் பருப்புகளுக்கான தேவை அதிகரித்து வருகிறது. இலங்கை உற்பத்தியாளர்கள் தங்களின் உயர்தர மற்றும் நிலையாக உற்பத்தி செய்யப்படும் முந்திரி பருப்பை ஊக்குவிப்பதன் மூலம் இந்தச் சந்தைக்குள் நுழைய முடியும்.

2020 ஆம் ஆண்டில், இலங்கை சுமார் 1,000 தொன் கொட்டைகளை ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதி செய்தது, அதன் மதிப்பு சுமார் 4 மில்லியன்



யூரோக்கள்.

### மூலிகை மற்றும் மருத்துவ தாவரங்கள்

இலங்கை வளமான பல்லுயிர் மற்றும் ஆயுர்வேத மருத்துவத்தின் நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. மூலிகை மற்றும் மருத்துவத் தாவரங்களுக்கான ஐரோப்பியச் சந்தை வளர்ந்து வருகிறது. மேலும் இலங்கை உற்பத்தியாளர்கள் உயர்தர மூலிகைகள் மற்றும் மருத்துவ தாவரங்களை ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்ய முடியும்.

2020 ஆம் ஆண்டில், இலங்கை சுமார் 600 டன் ஆயுர்வேதத் தயாரிப்புகளை ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதி செய்தது, அதன் மதிப்பு சுமார் 1 மில்லியன் யூரோக்கள்.

### சேதனத் தேன்

இலங்கை வளர்ந்து வரும் சேதன தேன் தொழிலைக் கொண்டுள்ளது. மேலும் ஐரோப்பாவில் நிலையான முறையில் உற்பத்தி செய்யப்படும் சேதன தேனுக்கான தேவை அதிகரித்து வருகிறது. இலங்கை உற்பத்தியாளர்கள் தங்களின் உயர்தர சேதனத் தேனை ஊக்குவிப்பதன் மூலம் இந்தச் சந்தைக்குள் நுழைய முடியும்.

2020 ஆம் ஆண்டில், இலங்கை சுமார் 400 தொன் தேனை ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதி செய்துள்ளது, இதன் மதிப்பு சுமார் 1 மில்லியன் யூரோக்கள்.

### கொக்கோ

இலங்கை ஒரு சிறிய ஆனால் வளர்ந்து வரும் கொக்கோத் தொழில் துறையைக் கொண்டுள்ளது. மேலும் ஐரோப்பாவில் உயர்தர நிலைத்தன்மையுடன் உற்பத்தி செய்யப்படும் கொக்கோவுக்கான தேவை அதிகரித்து வருகிறது. இலங்கை உற்பத்தியாளர்கள் கொக்கோ பீன்ஸ் மற்றும் சொக்லேட் போன்ற கொக்கோப் பொருட்களை ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்ய முடியும்.

### அத்தியாவசிய எண்ணெய்கள்

இலங்கை வளமான பல்லுயிரியலைக் கொண்டுள்ளது. மற்றும் இலவங்கப் பட்டை இலை எண்ணெய், சிட்ரோனெல்லா எண்ணெய் மற்றும் லெமன்கிராஸ் எண்ணெய் உள்ளிட்ட பல்வேறு அத்தியாவசிய எண்ணெய்களை உற்பத்தி செய்கிறது. அத்தியாவசிய எண்ணெய்களுக்கான ஐரோப்பியச் சந்தை குறிப்பிடத்தக்கது. மேலும் இலங்கை உற்பத்தியாளர்கள் உயர்தர அத்தியாவசிய எண்ணெய்களை ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்ய முடியும்.

2020 ஆம் ஆண்டில், இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்திற்குச் சுமார் 350 தொன் அத்தியாவசிய எண்ணெய்களை ஏற்றுமதி செய்தது, அதன் மதிப்பு சுமார் 5 மில்லியன் யூரோக்கள்.

### அரிசி

இலங்கை ஒரு முக்கிய அரிசி உற்பத்தியாளராக உள்ளது. மேலும் உயர்தர அரிசியை ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்யும் சாத்தியம் உள்ளது. பாசுமதி அரிசி போன்ற பிரத்தியேக அரிசிக்கான ஐரோப்பியச் சந்தை குறிப்பிடத்தக்கது. மேலும் இலங்கை உற்பத்தியாளர்கள் இந்தச் சந்தையை பயன்படுத்த முடியும்.

2020 ஆம் ஆண்டில், இலங்கை சுமார் 15,000 தொன் அரிசியை ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதி செய்துள்ளது, இதன் மதிப்பு சுமார் 8 மில்லியன் யூரோக்கள்.

### ஆர்கானிக் மசாலா

மஞ்சள், இஞ்சி, கிராம்பு உள்ளிட்ட பல்வேறு வகையான சேதன மசாலாப் பொருட்களை இலங்கை உற்பத்தி செய்கிறது. சேதன மசாலாப் பொருட்களுக்கான ஐரோப்பியச் சந்தை வளர்ந்து வருகிறது. மேலும் இலங்கை உற்பத்தியாளர்கள் உயர்தர கரிம மசாலாப் பொருட்களை ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்ய முடியும்.

### பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள்

இலங்கை ஒரு வளர்ந்து வரும் பதப்படுத்தப்பட்ட உணவுத் தொழிலைக் கொண்டுள்ளது. மேலும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்களான ஜாம், ஊறுகாய் மற்றும் சாஸ்கள் போன்றவற்றை ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்யும் சாத்தியம் உள்ளது. இலங்கை உற்பத்தியாளர்கள் தங்கள் உயர்தர, நிலையான உற்பத்திப் பொருட்களை ஊக்குவிப்பதன் மூலம் ஐரோப்பியச் சந்தைக்குள் நுழைய முடியும்.

2020 ஆம் ஆண்டில், இலங்கை சுமார் 3,000 தொன் பதப்படுத்தப்பட்ட உணவுகளை ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதி செய்தது, அதன் மதிப்பு சுமார் 8 மில்லியன் யூரோக்கள்.

www.agricultureinformation.lk




**அரசாங்கங்கள் வழங்கும் குறிப்பிட்ட சேவைகள், நாடுகளிலும் பிராந்தியங்களிலும் அவற்றின் அரசியல், சமூக மற்றும் பொருளாதாரச் சூழல்களின் அடிப்படையில் மாறுபடும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம். எவ்வாறாயினும், பொது மக்களுக்குச் சேவை செய்வதும், சமுதாயத்தின் நல்வாழ்வை மேம்படுத்துவதும் ஒட்டுமொத்த நோக்கமாக உள்ளது.**

# பொது மக்களுக்கான அரச சேவை



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

'பொது மக்களுக்கான அரச சேவை' என்பது நாட்டின் குடிமக்களின் தேவைகள் மற்றும் நலனைப் பூர்த்தி செய்வதற்காக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் பல்வேறு நடவடிக்கைகள் மற்றும் முன்முயற்சிகளைக் குறிக்கிறது. இந்தச் சேவைகள் ஒட்டுமொத்த மக்களின் நல்வாழ்வு, பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

பொது மக்களுக்கான அரசாங்க சேவையின் சில முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

1. பொது உட்கட்டமைப்பு
2. சமூக சேவைகள்
3. சட்டம் மற்றும் ஒழுங்கு
4. கல்வி
5. பொதுச் சுகாதாரம்
6. நுகர்வோர் பாதுகாப்பு
7. பொது ஈடுபாடு மற்றும் பங்கேற்பு

அரசாங்கங்கள் வழங்கும் குறிப்பிட்ட சேவைகள், நாடுகளிலும் பிராந்தியங்களிலும் அவற்றின் அரசியல், சமூக மற்றும் பொருளாதாரச் சூழல்களின் அடிப்படையில் மாறுபடும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம். எவ்வாறாயினும், பொது மக்களுக்குச் சேவை செய்வதும், சமுதாயத்தின் நல்வாழ்வை மேம்படுத்துவதும் ஒட்டுமொத்த நோக்கமாக உள்ளது.

பொதுச் சேவைகளை வழங்குவதில் இலங்கை அரச துறையில் பல பலவீனங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் சில:

அதிகாரத்துவம் மற்றும் கடினமான முறைமை: அரசாங்கத் துறையில் அதிகாரத்துவ அமைப்பு பெரும்பாலும் தாமதங்கள், திறமையின்மை மற்றும் அதிகப்படியான காகிதப்பணிகளுக்கு வழிவகுக்கிறது. இது சேவை இழுத்தடிப்பு மற்றும் சிக்கலான செயல்முறைகளை விளைவிக்கலாம். மக்கள் பொதுச் சேவைகளைச் சரியான நேரத்தில் அணுகுவதைக் கடினமாக்குகிறது.

வெளிப்படைத்தன்மை இல்லாமை: பொறுப்புக்கூறல் மற்றும் நல்லாட்சிக்கு வெளிப் படைத்தன்மை மிகவும் முக்கியமானது. எவ்வாறாயினும், இலங்கை அரசாங்கத் துறை பெரும்பாலும் வெளிப்படைத் தன்மையைக் கொண்டிருக்கவில்லை. இதனால் தீர்மானங்கள் எவ்வாறு எடுக்கப்படுகின்றன? அல்லது பொது வளங்கள் எங்கு ஒதுக்கப்படுகின்றன? என்பதைப் புரிந்துகொள்வது குடிமக்களுக்குக் கடினமாக உள்ளது. இது ஊழல் மற்றும் அந்த அமைப்பின் மீது நம்பிக்கையின்மைக்கு வழிவகுக்கும்.

போதிய உட்கட்டமைப்பு இன்மை: இலங்கையின் அரசாங்கத் துறையானது பொதுச் சேவைகளை ஆதரிப்பதற்குப் போதுமான உட்கட்டமைப்புகளை வழங்குவதில் சில சமயங்களில் போராடுகிறது. போக்குவரத்து, சுகாதார வசதிகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பயன்பாடுகள் போன்ற பகுதிகள் இதில் அடங்கும். போதிய உட்கட்டமைப்பு இல்லாமை பொதுமக்களுக்குச் சேவைகளை திறம்பட வழங்குவதில் தடையாக இருக்கும்.

வரையறுக்கப்பட்ட மனித வளங்கள் மற்றும் திறன்: திறமையான மற்றும் தகுதிவாய்ந்த பணியாளர்களைப் பணியமர்த்துதல் மற்றும் தக்கவைத்துக் கொள்வதில் அரசாங்கத்துறையானது பெரும் சவால்களை எதிர்கொள்கின்றது. இது பயிற்சி பெற்ற நிபுணர்களின் பற்றாக் குறையை விளைவிக்கும், திறமையின்மை மற்றும் தரமற்ற சேவை வழங்கலுக்கு வழிவகுக்கும். இதனால் தற்போதுள்ள அரச ஊழியர்களுக்குத் தொடர்ந்து பயிற்சி மற்றும் தொழில்முறை மேம்பாட்டு வாய்ப்புகள் இல்லாதிருக்கலாம், குறைவாகக் காணப்படலாம்.

அரசியல் தலையீடு: அரசாங்கத் துறையின் சுதந்திரத்தையும் செயற்றிறனையும் அரசியல் தலையீடு குழிபறிக்கும். பக்கச்சார்பு, சுயநலப்போக்கு மற்றும் ஊழல் ஆகியவை முடிவெடுக்கும் செயல்முறைகள் மற்றும் வளங்களை ஒதுக்கீடு செய்வதில் செல்வாக்குச் செலுத்திப் பொதுச் சேவைகளின் தரம் மற்றும் நேர்மையைப் பாதிப்படையச் செய்யலாம்.

நிதி மற்றும் வரவு செலவுக் கட்டுப்பாடுகள்: அரசுத் துறைக்கு ஒதுக்கப்படும் வரையறுக்கப்பட்ட நிதி ஆதாரங்கள் தரமான பொதுச் சேவைகளை வழங்குவதில் தடையாக இருக்கும். போதிய நிதியில்லாததால் உட்கட்டமைப்பு, தொழில்நுட்பம் மற்றும் மனித வளங்களில் முதலீடு இல்லாததால் பொதுமக்களின் தேவைகள் மற்றும் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்கான துறையின் திறனைத் தடுக்கின்றமையைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

சேவை வழங்குவதில் திறமையின்மை: பல சந்தர்ப்பங்களில் பொதுச் சேவைகள் எவ்வாறு வழங்கப்படுகின்றன என்பதில் திறமையின்மை காணப்படுகின்றது. நீண்ட காத்திருப்பு நேரங்கள், சிக்கலான நடைமுறைகள் மற்றும் அரசாங்கத் துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பு இல்லாமை ஆகியவை குடிமக்களை விரக்

தியடையச்செய்து, சேவைகளைத்திறம்பட அணுகுவதைச் சவாலாக மாற்றுகின்றது.

வரையறுக்கப்பட்ட குடிமக்களின் ஈடுபாடு மற்றும் பங்கேற்பு: பயனுள்ள நிர்வாகத்திற்கு பொதுமக்களின் பங்கேற்பு மற்றும் குடிமக்கள் ஈடுபாடு அவசியம். எவ்வாறாயினும், இலங்கையில் உள்ள அரசாங்கத் துறையானது குடிமக்கள் முடி வெடுக்கும் செயல்முறைகளில் பங்கேற்க அல்லது பொதுச் சேவைகள் பற்றிய கருத் துக்களை வழங்குவதற்குப் போதுமான வாய்ப்புகள் குறைவாகக் காணப்படுகின்றது. இது உரிமை மற்றும் பொறுப்புக்கூறலின் பற்றாக்குறைக்கு வழிவகுக்கின்றது.

பொதுச் சேவைகளை வழங்கும்போது இலங்கை அரசாங்கத் துறையில் உள்ள பலவீனங்களைச் சமாளிப்பதற்கு பல்வேறு அம்சங்களைக் கையாளும் ஒரு விரிவான அணுகுமுறை தேவைப்படுகிறது. பொதுச் சேவை வழங்கலின் திறன் மற்றும் செயற்றிறனை மேம்படுத்த எடுக்கப்படக்கூடிய சில படிகள் பின்வருமாறு:

வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்துதல்: பொதுச் சேவைகள் தொடர்பான தகவல்கள் குடிமக்களுக்கு உடனடியாகக் கிடைப்பதை உறுதி செய்வதன் மூலம் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதல். இணைய முகப்பு (ஆன்லைன் போர்டல்கள்), உதவி எண்கள் (ஹெல்ப் லைன்கள்) மற்றும் பொது விசாரணைகள் போன்ற வழிமுறைகளைச் செயல்படுத்திக் கருத்துக்களைச் சேகரிக்கவும், குறைகளை நிவர்த்தி செய்யவது முக்கியமாகும். பொது அதிகாரிகளுக்குத் தெளிவான செயற்றிறன் குறிகாட்டிகள் மற்றும் பொறுப்புக்கூறல் கட்டமைப்புக்களை நிறுவுதலின் வாயிலாக மேலும் இதனை மேம்படுத்தலாம்.

திறன் மற்றும் பயிற்சியை வலுப்படுத்துதல்: பொதுச் சேவை வழங்கலில் ஈடுபட்டுள்ள அரசு அதிகாரிகளின் திறன் மற்றும் அறிவை மேம்படுத்த பயிற்சித் திட்டங்களில் முதலீடு செய்வது மிகவும் அவசியம். திட்ட மேலாண்மை, தகவல் தொடர்புத் திறன், வாடிக்கையாளர் சேவை மற்றும் தொழில்நுட்பத்தைத் திறம்படப் பயன்படுத்துதல் போன்ற பகுதிகள் இதில் அடங்கும். தொடர்ச்சியான தொழில்முறை மேம்பாட்டுத் திட்டங்கள் போன்ற செயற்றிட்டங்கள் அதிகாரிகளுக்குச் சிறந்த நடைமுறைகளுடன் புதுப்பிக்க உதவும்.

நிர்வாக நடைமுறைகளை நெறிப்படுத்துதல்: அதிகாரத்துவ செயல்முறைகளை எளிமையாக்கி, அதாவது தேவையற்ற கடினமான முறைமையினைக் குறைக்க வேண்டும். ஏற்கனவே உள்ள நடைமுறைகளை முழுமையாக மதிப்பாய்வு செய்வதன் மூலம் இடையூறுகளைக் கண்டறிந்து



அகற்றுவதற்கு மேலும் உதவுகின்றது. மின் ஆளுமைத் தீர்வுகளைச் செயற்படுத்துவதன் வாயிலாக செயல்முறைகளைத் தானியக்கமாக்குவதற்கும், காகிதப் பணிகளைக் குறைப்பதற்கும், சேவை வழங்கலின் செயற்றிறனை மேம்படுத்துவதற்கும் பெரிதும் உதவுகின்றது.

சிறந்த சேவைக் கலாச்சாரத்தை வளர்ப்பது: வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட அணுகுமுறையை அரசாங்கத் துறையில் உருவாக்குதல் அவசியமாகின்றது. அரச அதிகாரிகள் குடி மக்களுக்கு உடனடி, மரியாதையான மற்றும் திறமையான சேவைகளை வழங்குவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துவது மிகவும் விரும்பத்தக்கது. முன்மாதிரியான செயற்றிறனை அங்கீகரித்து வெகுமதி அளிப்பதுடன், சேவை தரத்திற்கு முன்னுரிமை அளிக்க அதிகாரிகளுக்கு ஊக்கத் தொகையை உருவாக்குவதன் மூலம் அடையவேண்டிய நோக்கத்தினை இலகுவாக அடையமுடியும்.

தொழில்நுட்பத்தை முழுமையாகத் தழுவுதல்: சேவை வழங்கலை நவீனப்படுத்தப் பொருத்தமான தொழில்நுட்பங்களில் முதலீடு செய்ய வேண்டும். குடிமக்கள் ஈடுபாடு, சேவை கோரிக்கைகள் மற்றும் கருத்துக்கான சமூகவலைத் தளங்களை முழுமையாகச் செயற்படுத்த வேண்டும். மேம்பாட்டிற்கான பகுதிகளைக் கண்டறிந்து சேவை செயற்றிறனைக் கண்காணிக்க தரவுப் பகுப்பாய்வுகளைப் பயன்படுத்துவது சிறந்தது. தொலைபேசி (மொபைல்) தொழிநுட்பத்தைப் பயன்படுத்துவதன் வாயிலாகப் பரந்தளவில் மக்களை அடைவதுடன், கிராம-நகர்ப்புற வேறுபாட்டினைக் குறைக்கமுடியும்.

பொது-தனியார் கூட்டாண்மைகளை ஊக்குவித்தல்: சேவை வழங்கலை மேம்படுத்துவதில் அவர்களின் நிபுணத்துவம் மற்றும் வளங்களைப் பயன்படுத்த தனியார் துறை மற்றும் சிவில் சமூக அமைப்புகளுடன் ஒத்துழைத்து செயலாற்றலாம். புதுமை, செயற்றிறன் மற்றும் பொறுப்புணர்வை ஊக்குவிக்கும் கூட்டாண்மைகளை வளர்த்தல் கூடுதலான அனுகூலங்களினை ஏற்படுத்தும்.

உட்கட்டுப்பாடுகள் மற்றும் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துதல்: ஊழலைத் தடுக்கவும், அரசாங்கத் துறையில் நேர்மையை மேம்படுத்தவும் வலுவான அமைப்புக்களைச் செயல்படுத்துதல் வேண்டும். ஊழல் எதிர்ப்புச் சட்டங்கள், வழக்கமான தணிக்கைகள் மற்றும் பயனுள்ள தகவல் தருபவர்கள் பாதுகாப்பு வழிமுறைகளைக் கடுமையாக அமுலாக்குதல் ஆகியவை இதில் அடங்கும்.

மக்கள் பங்கேற்பை ஊக்குவித்தல்: முடிவெடுக்கும் செயல்முறைகள், மற்றும் கொள்கை மேம்பாட்டில் குடிமக்களை ஈடுபடுத்தச் சந்தர்ப்பம் வழங்கவேண்டும். குடிமக்களின் தேவைகள் மற்றும் முன்னுரிமைகளுடன் பொதுச் சேவைகள் சீரமைக்கப்படுவதை உறுதிப்படுத்தக் குடிமக்கள் ஆலோசனைக் குழுக்கள், பொது ஆலோசனைகள் மற்றும் பங்கேற்பு வரவு செலவுத் திட்டம் (பட்ஜெட்) போன்ற வழிமுறைகளை நிறுவுதல் என்பவற்றை மேற்கொள்ளலாம்.

செயற்றிறனைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்: அரசு நிறுவனங்கள் மற்றும் சேவை வழங்கல் பிரிவுகளின் செயற்றிறனைத் தொடர்ந்து மதிப்பீடு செய்தல் முறைமையினை முழுமையாக அமுல்படுத்துதல். செயற்றிறனை அளவிடவும், மற்றும் முன்னேற்றத்திற்கான பகுதிகளை அடையாளம் காணவும் முக்கிய செயற்றிறன் குறிகாட்டிகள், குடிமக்கள் கருத்து மற்றும் சுயாதீன மதிப்பீடுகளைப் பயன்படுத்த வேண்டும். காலத்திற்குக் காலம் செயற்றிறன் அறிக்கைகளை வெளியிடுவதன் மூலம் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை வளர்க்கக் கூடியதாக இருக்கும்.

தொடர்ச்சியான கற்றல் மற்றும் தழுவல்: அரசாங்கத் துறையில் கற்றல் மற்றும் தொடர்ச்சியான முன்னேற்றத்தின் கலாச்சாரத்தை வளர்க்க ஆவன செய்தல் வேண்டும். உள்நாட்டிலும், சர்வதேச அளவிலும் வெற்றிகரமான முயற்சிகளில் இருந்து கற்றுக்கொள்ள அதிகாரிகளை ஊக்குவிக்க வேண்டும். வளர்ந்து வரும் சிறந்த நடைமுறைகள், மற்றும் கற்றுக்கொண்ட பாடங்களின் அடிப்படையில் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை தொடர்ந்து புதுப்பிக்க சந்தர்ப்பம் வழக்க வேண்டும்.

இந்த நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்தின் நிலையான அர்ப்பணிப்பு, மற்றும் பல்வேறு பிரிவினர்களின் ஒத்துழைப்பும் தேவைப்படும். பலவீனங்களை நிவர்த்தி செய்வதன் மூலமும், பொதுச் சேவை வழங்கலை மேம்படுத்துவதன் மூலமும் அரசாங்கம் குடிமக்களின் திருப்தி, நம்பிக்கை மற்றும் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியை மேம்படுத்த முடியும்.

+94-777-802-900
Email: swaminathan@agsarma.com

# சுற்றுச்சூழலை பாதுகாக்க தவறுகிறோமா?



வடகோவை வரதராஜன்

ஜுன் 05 ஐ சுற்றுச்சூழல் தினமாக அறிவித்திருக்கிறது ஐக்கியநாடுகள் சபை ஏன் இந்தத் தினங்கள் அனுட்டிக்கப்படுகின்றன?

கரப்பான் பூச்சிக்கு ஒரு தினம் அறிவிக்கப்பட்டிருக்கிறதா?

காக்கைகளுக்கு ஒரு தினம் அறிவிக்கப்பட்டிருக்கிறதா?

புலிக்கும் , சிட்டுக்குருவிக்கும் ஏன் ஒவ்வொரு தினங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன?

இது பற்றி நீங்கள் யோசித்துப் பார்த்ததுண்டா?

உலகில் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கும் எந்த ஓர் உயிருக்கும், எந்தவொரு பொருளுக்கும், வழக்கொழியும் எந்தவோர் சம்பவத்திற்கும் ஐ.நா. தினங்களைப் பிரகடனப்படுத்தி உள்ளது.

அந்தவகையில் சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அதுபற்றி கரிசனம் கொள்ளவும், நம்மளவிலாவது சுற்றுச்சூழலை பாதுகாக்கவும் அறிவிக்கப்பட்டதே உலக சுற்றுச்சூழல் தினம்.

நாம் சும்மா “சுற்றுச்சூழல் தின வாழ்த்துக்கள்“ என வாழ்த்துத் தெரிவித்துவிட்டு போய்விடுகிறோம் .

வாழ்த்துக்கள் தெரிவிக்கவா இந்த தினம்? இல்லை!

இதைப்பற்றிக் கரிசனம் கொள்ளவே இத்தினம்.

பூமியில் ஒவ்வொரு நிமிடமும் 56 ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன என்று புள்ளிவிபரங்கள் சொல்லுகின்றன.

இந்த வேகத்தில் காடுகள் அழிக்கப்பட்டால், நச்சுவாயுக்களின் வெளியேற்றத்தினால் ஓசோன் படலம் அழிக்கப்பட்டால் காபனிர்ரொக்சைட்டின் செறிவு அதிகரித்து சூழல் வெப்பம் உயர்ந்து பூமி கொதிகலனாக மாறும்.

பனிக்கட்டிகள் உருகி கடல் மட்டம் உயர்ந்து மாலைதீவு , இலங்கை உட்பட பல தீவுகள் காணாமல் போகும்.

நீர்மட்டமும் வெப்பநிலையும் உயர்வதால் அதிகளவு நீர் ஆவியாகும்.

இதனால் ஓர் இடத்தில் கடும் வறட்சியும் ஓர் இடத்தில் பேய்மழையும் உருவாகும்.

இவற்றுக்கு நாம் என்ன செய்யப் போகிறோம்?

உலகில் பெருமளவு காடுகள் விவசாயம் செய்யவா அழிக்கப்படுகின்றன? இல்லை!

சுரங்கம் தோண்டித் தாதுக்களை எடுக்கவும், உல்லாச விடுதிகள் கட்டவும், தொழிற்சாலைகள் கட்டவும், பணப் பயிர்கள் பயிரிடவுமே அநேக காடுகள் அழிக்கப்படுகின்றன.

> **“பூமியில் ஒவொரு நிமிடமும் 56 ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று புள்ளிவிபரங்கள் சொல்லுகின்றன. இந்த வேகத்தில் காடுகள் அழிக்கப்பட்டால், நச்சுவாயுக்களின் வெளியேற்றத்தினால் ஓசோன் படலம் அழிக்கப்பட்டால் காபனிர்ரொக்சைட்டின் செறிவு அதிகரித்து சூழல் வெப்பம் உயர்ந்து பூமி கொதிகலனாக மாறும்.”**

இன்று நாம் பருகும் தேநீருக்காகவும், கோப்பிக்காகவும் எத்தனை இலட்சம் ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டுள்ளன என்பதைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்திருக்கிறோமா ?

எமது வருமானத்தில் எத்தனை சதவீதம் உணவிற்காக செலவு செய்கிறோம் என்று நீங்கள் யாராவது கணக்குப் பார்த்ததுண்டா?

உணவிற்கு 1/4 பங்கு கூட செலவழிப்பதில்லை.

மிச்சம் எல்லாம் ஆடம்பர செலவுகள். உடைக்கும், செருப்பிற்கும், எரிபொருளுக்கும், ரெலிபோனுக்கும் சோப்பு தொடக்கம் ஏனைய ஆடம்பர பொருள்களுக்கே எமது உழைப்பின் பெரும் பகுதி போகிறது.

யாழ்ப்பாணத்தில் எத்தனை வெற்றுக் காணிகளுக்கு சுற்று மதில்கள் கட்டப்பட்டுள்ளன?

இவற்றுக்கு எத்தனை ஆயிரம் தொன் சீமெந்து பாவிக்கப்பட்டுள்ளது?

எத்தனை ஆயிரம் மக்கள் வீடில்லாமல் இருக்கிறார்கள்?

யாழ்ப்பாணத்தில், அபாயகரமான பார உலோக நஞ்சுகளை தம்மகத்தே கொண்ட எத்தனை தீந்தை (paint) கடைகள் உள்ளன?

எத்தனை கோடி தொன் மக்காத குப்பைகள், இரசாயனக் கழிவுகள், மருத்துவ கழிவுகள், அணுக்கழிவுகள் வீசப்பட்டு பூமிப் பந்தை நஞ்சாக்குகின்றன?

என்பது போன்ற புள்ளி விபரங்களை நீங்கள் அறிய முற்பட்டது உண்டா?

உங்கள் வீட்டுத் தரையை அழகு படுத்தும் மாபிள் கற்களைப் பெற எத்தனை மலைகள் அழிக்கப்பட்டுள்ளன என்ற கணக்கு உங்களுக்கு தெரியுமா?

ஓர் இயற்கை வளத்தை இன்னொன்றாக மாறும்போதே அது, சூழலுக்கு கேடுதரும் மட்காத பொருளாக மாறுகிறது.

களிமண்ணும், சுண்ணக்கல்லும் அவையாக இருக்கும் போது அவை சூழலுக்கு பாதிப்புத் தருவதில்லை.

இவையிரண்டும்,சீமெந்தாக உருவாகும் போது அது மக்காத பொருளாக மாறுகிறது.

காபனும் ஐதரசனும் அவையாக இருக்கும்போது சூழலை அச்சுறுத்துவதில்லை.

இவை சேர்ந்து பொலித்தீன் ஆக மாறும் போது, மட்காத நஞ்சாகப் பூமியை மூடுகிறது.

சிலிக்காக மணல், மணலாக இருக்கும் போது எந்தவித தீங்கும் இல்லை.

அதுவே கண்ணாடியாக உருவாகி உடைந்த போத்தில்களாக எம் காலைப் பதம் பார்க்கின்றன.

அப்போ, சுற்றுசூழலை பாதுகாக்க, நாம் இவற்றை எல்லாம் பயன்படுத்தாமல் கற்காலத்துக்குப் போகவேண்டுமா? இல்லை!

முன்னோக்கி செல்லும் சக்கரத்தை பின்னோக்கிப் பயணிக்க வைக்க முடியாது.

அப்போ நாங்கள் சுற்றுச்சூழலைப் பற்றி கவலை கொள்ளாது எமது மகிழ்ச்சிக்காக எல்லாவற்றையும் செய்துவிட்டு போவோம் என்கிறீர்களா?

அப்போ நீங்கள் உங்கள் பிள்ளைகளைப் பற்றியும் கவலை கொள்வதையும் நிறுத்துங்கள்.

இதே வேகத்தில் நாம் பயணிப்போமாக இருந்தால், இன்னும் 25 வருடங்களுக்குப் பின் இந்தப் பூமியில் எங்கள் பிள்ளைகள் வாழமுடியாத ஒரு நிலை ஏற்பட்டே தீரும்.

அப்போ சுற்றுசூழலைப் பாதுகாக்க நாம் எம்மளவில் என்ன செய்யலாம்?

இவற்றுக்கான பதிலை மற்றொரு கட்டுரையில் பார்ப்போம்.



**“காடு இன்றி நீரும் நிலமின்றி உணவும் கிடைக்காதெனத்தெரிந்தும் எங்களில் பெருமளவானோர் இரசாயன உரங்களையும் பூச்சி கொல்லிகளையும்அதிக விலைகொடுத்தும் வரிசைகளில் நின்றும் பெற்றுக்கொள்வதில் முனைப்புக்காட்டுகிறோம். உடனடியாகப் பயன்காணும் அவசரமும் இயற்கை விவசாயம் மீதான தெளிவற்ற நிலையும் சேர்ந்து எங்களை மரணத்தை நோக்கி இழுத்துச்செல்கின்றது”**

**ஆராஅமுதன்**

# மண் வளமே நம் வளம்

மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற் காடும் உடைய தரண் வற்றாத மணி போன்ற தெளிந்த நீரும் ,நிழலும் பயிரிடுவதற்கான நிலமும், குளிர்ந்த அழகிய மலைகளும், தண்ணீரை ஓயாமல் கொடுக்கும் செழித்து வளர்ந்த காடுகளும் ஆகிய நான்கும் ஒரு நாட்டிற்கு இன்றியமையாததாகும். இவையாவும் ஒருங்கே கொண்ட நம் தேசத்தாயின் மேனியெங்கும் நஞ்சைவிதைக்கும் வஞ்சகர்களாகிவிட்ட துர்ப்பாக்கிய மனிதராகிவிட்டோமென்பது உண்மையெனத்தெரிந்தும் நமக்கு நாமே கூறிக்கொள்ளும் அசட்டுக் காரணங்கள் தான் நகைப்பிற்கிடமானவை.

நீர், நிலம், மலை, காடு ஆகிய இந்த நான்கும் மானிட வாழ்வியலோடு பின்னிப்பிணைந்திருக்கிறதென்பது நம் அனைவருக்கும் தெரிந்த உண்மை தானே....

காடு இன்றி நீரும் நிலமுமின்றி உணவும் கிடைக்காதெனத்தெரிந்தும் எங்களில் பெருமளவானோர் இரசாயன உரங்களையும் பூச்சி கொல்லிகளையும்அதிக விலைகொடுத்தும் வரிசைகளில் நின்றும் பெற்றுக்கொள்வதில் முனைப்புக்காட்டுகிறோம். உடனடியாகப் பயன்காணும் அவசரமும் இயற்கை விவசாயம் மீதான தெளிவற்ற நிலையும் சேர்ந்து எங்களை மரணத்தை நோக்கி இழுத்துச்செல்கின்றது. மருத்துவ ஆய்வு அறிக்கைகளின்படி கிருமிநாசினிகளையும் இரசாயன உரங்களையும் பயன்படுத்துபவர்களின் அதிகமானோர் சுவாசப்பை அழற்சி மற்றும் குடல்புற்றுநோயினால் பாதிக்கப்படுகின்றனர் என்கின்றனர்...

நஞ்சு எனத் தெரிந்தும் அதனை ஊணோடு சேர்க்கும் எங்கள் தைரியத்தை என்னவென்பது...?

இந்த அவசர உலகத்தில் வெவ்வேறு விதவிதமான பெயர்களில் நாம் உண்பதற்கு நஞ்சுகள் உற்பத்திசெய்யப்படுகின்றன. நாமோ கைகளைக்கட்டி அதன் பின்னே ஓடிக்கொண்டிருக்கிறோம்.

சமீபகாலங்களாக இலங்கையில் பேசுபொருளாகியிருக்கும் இயற்கை விவசாயம் பற்றிய புரிதல்களை ஏற்படுத்துமுகமாக பலதரப்பட்ட இயற்கை ஆர்வலர்கள் தங்களை நிலைநிறுத்திவருகின்றனர்.

இரசாயனமற்ற மரக்கறிகளைத் தானியங்களைக் கீரைகளை உங்கள் குழந்தைகளுக்கு கொடுப்பதன்மூலம் ஆரோக்கியமான ஒரு சந்ததியை நாட்டிற்கு அளிக்கிறீர்கள். கலர்கலரான விளம்பரங்களுக்கு ஏமாந்துவிடாமல் ஆரோக்கியமான, இயல்திறன்கொண்ட சமூகத்தை உருவாக்க வேண்டியது நம் ஒவ்வொருவரதும் கடப்பாடாகும். மண் வளம் இன்றேல் உன் வளம் இல்லை.

இது பொதுவாக விவசாயத்தை நம்பி வாழும் வியாபாரிகளுக்கு மட்டுமன்றி உணவுண்ணும் யாவருக்குமான செய்தியாகக்கொள்வோம். சகலருக்கும் பொதுவானவள் பூமித்தாய்..நம் தாயின் கருப்பை பச்சையம் போர்த்திக்கிடக்கிறது. இது வாழ்வின் மூலாதாரமின்றி வேறென்ன?

இந்தப்பரந்துகிடக்கும் தேசத்தின் ஒவ்வொரு பிடி மண்ணும் எங்கள் சந்ததியின் மூச்சுக்காற்றை நிர்ணயிக்கிறது என்பதனை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும் சமீபகாலங்களாக அனந்தராஜா நவஜீவன் இயற்கை வழி இயக்கம் முன்னெடுத்திருக்கும் இயற்கை விவசாய விழிப்புணர்வுகள். புதிய வெளிச்சம் நிறுவனத்தின் இயற்கை வழி ஒருங்கிணைந்த பண்ணைய பயிலரங்குகள் விவசாயத் திணைக்களத்தினரின் கருத்தமர்வுகள், இயற்கை விவசாயிகளின், ஆர்வலர்களின் புதிய கண்டுபிடிப்புக்கள் என்று பல சமூகச் சங்கிலிகளால் இயற்கை விவசாயம் பலப்படுத்தப்பட்டுள்ளது என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

வயலில் இறங்கிகளை பிடுங்கவும் பூச்சிவிரட்டிகளை இயற்கையாகவே தயாரித்துப் பயன்படுத்தவும் தொடங்கும்போது நமது வளத்தையும் வளர்ச்சியையும் யாராலும் தடுக்கமுடியாது ..

இது நாங்கள் சிந்தித்துச் செயலாற்றும் நேரம்..தயவு செய்து யோசிப்போம்.. எங்கள் அடுத்த தலைமுறைக்கு நாங்கள் விட்டுச்செல்லப்போகின்ற செல்வங்கள் எவை? சுத்தமான நிலமும் நீரும், சுதந்திரமான காற்றும் காடும் கடலுமென்று அளிக்கொடும்போம்..

பூமித்தாயின் மடியிலே கொட்டிக்கிடக்கும் செல்வங்கள் ஒன்றில்லை நூறில்லை ஓராயிரம்..

இயற்கை நமக்குப் பெருங்கொடை...
இயற்கை நமது கடவுள்
இயற்கைதான் நமது தாய்
“மண்வளமின்றேல் நம் வளமில்லை”


ஆகவே

நாம் மண்வளம் காத்து மானிடம் வளர்க்கும்அற்புதப் பணியில் இணைவோமா?



# உழைப்பும் செலவும்

## எங்கள் வாழ்வும் வளமும்



- தமிழ்க்கவி -

கலை கலாச்சாரம் விழுமியங்கள் என்றெல்லாம் பேசப்படுகிறதே அது அவசியந்தானா? இலக்கியம், மொழி புத்தகங்கள் என்பவை மனித வாழ்விற்கு அவசியந்தானா? காலையில் தூங்கி எழுந்து இன்றைக்கு எங்கே வேலை கிடைக்கும். எப்படி எனது குடும்பத்திற்கு சோறு போடப் போகிறேன். என்ற சிந்தனையோடு எழுகின்ற ஒருவருக்கு அது தேவையில்லாத விடயங்கள்தான்.

அந்தக்கலைகளையே தொழிலாக்கி அதன்மூலம் பெரும் பொருளீட்டி எம்மை அடிமைகளாக வைத்திருக்கும் ஒரு சமூகத்தைப் பற்றி நாம் யோசிப்பதில்லை. அல்லது பொழுதுக்கும் அதையே யோசித்துக் கொண்டிருக்கிறோம். எமது நேரம் ஒரு நாட் பொழுதின் இருபத்துநாலு மணித்தியாலங்கள்தான். இதில் தூங்கவும் சாப்பிடவும் குளிப்பதற்கும் கண்டிப்பாக நேரம் ஒதுக்கி ஆக வேண்டும். உழைப்பதற்கான நேரம், வேலைக்கு வேலை இடத்துக்கு இடம், ஆளுக்கு ஆள் வேறுபடும்.

“ஒரு மனிதன் கண்டிப்பாக எட்டு மணித்தியாலம் கடுமையாக உழைக்க வேண்டும் அப்படி உழைத்தால் – அவன் விரைவிலேயே பெரிய நிலைக்கு வந்து, ஒரு நாளில் பன்னிரண்டு மணித்தியாலம் வேலை செய்ய முடியும்” இதுதான் உழைப்பின் சூத்திரம். நாங்கள் அப்படி வேலை செய்கிறோமா? என்ற கேள்வியை எம்மிடம் கேட்டுப்பார்த்தால். விடை பூச்சியமாக வரப்போகிறது. எம்மை இப்போது எமது பெற்றோரோ அல்லது குடும்ப நிலைவரமோ வழிநடத்துவது இல்லை. எம்மை நாங்களும் வழிநடத்துவது இல்லை.

ஒரு வீட்டில் அம்மா தன் மகளிடம் “பிள்ளை தம்பி எழும்பீற்றானா பார் தேநீர் ஊற்ற?” என்று கேட்கிறாள். “ ஓ... அவன்ர போன் சத்தம் கேக்கிது எழும்பீட்டான்.”

“ரோய்லட்டுக்கதவு கன நேரமா பூட்டிக்கிடக்கு ஆரெண்டு கேள்”

“உள்ளுக்க கேம் சத்தம் கேக்கிது அக்காபோல”

இதை கேட்டுக் கொண்டிருக்கும் அம்மா அடுக்களையில் வெங்காயம் நறுக்கிக் கொண்டிருக்க, அவர் முன்னே ஒரு ஐபாட் நிமிர்ந்து நிற்கிறது. இவற்றின் செலவுக்கு ஒரு ஆண் அல்லது பெண், குடும்பத் தலைவர் என்கிற பெயரில், ஒரு வர்த்தக நிலையத்திலோ, தொழிற்சாலையிலோ, பனிப் பொழிவிற்குள்ளோ அனல் உலைகளிலோ அயராது உழைத்துக் கொண்டி

ருக்கிறார்.

நாம் வீடுகளில் சுடச்சுட ஆக்கிச் சாப்பிட அவர் பழைய உணவை சுடவைத்து சாப்பிட்டுக்கொண்டு உழைக்கிறார். நம்மால் மீளமுடியாத கைதியாக மாறியிருக்கும் அவரைப்பற்றி நாம் கவலைப்படுவதில்லை. வெளிநாடுகளில் மட்டுமல்ல. எமது மண்ணில் வசிப்பவர்களுக்கும் இதே நிலைதான்.

அழகான கவர்ச்சியான ஆடையில் இரண்டு பெண்கள் கடைத்தெருவில் மகிழ்ச்சியாக உரையாடியபடி செல்கிறார்கள். ஒருத்தி சொன்னாள் "பரந்தன்தானே இப்ப மினிபஸ் வந்திடும் போகலாம்" மற்றவள் சொன்னாள். "ச்சஷீ.. சட்டை கசங்கிப் போகும் பயங்கர வெய்யில் ஓர் ஓட்டோ எடுத்துக் கொண்டு போவம்." அப்படியே ஓர் ஓட்டோவை மறித்து ஏறினார்கள். பஸ் என்றால் இருவருக்கும் நூறு ரூபாவுடன் முடியும் பயணம் ஆயிரம் ரூபாவை அல்லது அதற்குக் கூடவோ விழுங்குகிறது. அவளுடைய கணவன் எனது வீட்டின் பக்கலில்தான் கொங்கிறீற் கலவை சுமந்து கொண்டிருந்தான். அதே வெய்யில்தான் இங்கும்.

அவர்களுடைய மகிழ்ச்சிக்காக இவர்கள் உழைக்கிறார்கள். ஆனால் அந்த உழைப்பில் இவர்கள் குளிர் காய்கிறார்கள். கூலி வேலை செய்பவனுக்கு இப்போது நல்ல கனமான கூலி கிடைக்கிறது. ஆனால் அவர்களுடைய குடும்பம் எப்போதும் வறுமையில் உழல்கிறது. மீனவர்களுடைய வாழ்வும் சீவல் தொழிலாளர்களுடைய வாழ்வும் இன்றும் ஏராளமான தொழிலாளர்களுடைய வாழ்வும் வறுமையை தத்தெடுத்துக் கொண்டிருக்கின்றன.

திடீரென அடிக்கும் அதிர்ஷ்டம் போல மீனவர்களுக்கு பெருமளவில் மீன் கிடைத்தால் அவன் அந்தப்பணம் முடியும்வரை குடித்து அரட்டையடித்துச் சந்தோசமாக செலவு செய்து மகிழ்வான். வேலைக்கும் போகமாட்டான். இனிநாளைய செலவுக்கும் கடன் வாங்கிவிட்டு அடுத்தநாள் வேலைக்கு புறப்படுவான்.

இதே நிலைதான் நிரந்தர கூலி வேலை செய்பவர்களுக்கும். உழைப்பதில் பெருமளவைக் குடித்து அழிப்பதும் இவர்கள்தான். இவர்களுக்காகவே நள்ளிரவில் திறந்திருக்கும் கசிப்பு விற்பனை நிலையங்களும். இதற்கேற்றாற் போல இவர்களுக்கு அமையும் மனைவியரும் பதிவிரதைகளாக இருப்பதைக் காண்கிறோம். என்னதான் கணவன் குடித்து விட்டு வீட்டுக்கு வந்து தம்மை அடித்து துன்புறுத்தினாலும் மறுநாள் காலையில் கணவனுக்கு முட்டைக் கோப்பி போட்டுக் கொடுத்து வேலைக்கு அனுப்புவார்கள்.

ஊரில் உள்ள சேளிக்கைகளில் தொலைக்காட்சி ஐபோன் என அனைத்து ஊடகங்கள் ஊடாகவும் தொடர்பை வைத்திருப்பார்கள். வீட்டில் நாலு கோழிகூட வளர்க்கமாட்டார்கள். அதிகம் ஏன் தமக்கான ஆடைகளைக்கூட தைத்து உடுத்தமாட்டார்கள். ஆனால் தமது கணவனைக் கொண்டாடுவார்கள். இந்தப்பெண்களிடம் எமது பெண் விடுதலைக் கோட்பாடுகள் எதுவும் செல்லாது. இவர்களுக்கு கணவனே கண்கண்ட தெய்வம்.

ஒரு வீட்டில் கணவனும் மனைவியும் உழைக்கிறார்கள் என்றால் அது பெருமையாகக் கருதப்பட வேண்டிய விடயம். ஆனால் இன்றைய பெண்களின் நேரத்தில் பெரும்பான்மையான நேரத்தை தொலைக்காட்சித் தொடர்களும் தொ(ல்)லைபேசிகளும் அபகரித்து வைத்திருக்கின்றன. முற்காலத்தில் பெண்களது வேலை நேரத்திலுங்கூட அடுக்கடுக்காக பிறந்த குழந்தைகளைக் கூட அளவாகத்தான் பெற முடிந்தது அவர்கள் பிள்ளையை தொட்டிலில் போட்டு விட்டுத் தாலாட்டுப்பாடியவாறே ஏதாவது கைத் தொழிலை செய்தார்கள். இன்றைக்கு நாம் எமது பொன்னான நேரத்தை வீணாகத்தான் கழிக்கிறோம்.

> "என் தந்தை மகாத்மா காந்தி பற்றி எனக்குக் கதை சொன்னபோது முக்கியமாக சொல்வது "ஒவ்வொரு வேளை உணவையும் உண்பதற்கு உட்கார முதல் அதற்கான உழைப்பைச் செய்து விட்டோமா என்பதை முதலில் எண்ணிப் பார்" இதை நான் என் பிள்ளைகளுக்கும் சொல்லி வளர்த்தேன்."

சாப்பாடில்லாமல் எனது நாளைக்கழிக்க முடியும். போனில்லாமல் முடியவே முடியாது. எனக்கூறாத இளைஞர்கள் இல்லை என்றால் அது பொய். முதியவர்களாலும் முடியாது. இதை டாக்டர் பர்வீன் சுல்தானா அழகாகச் சொல்வார், 'இருபத்தைந்தும் அதுக்கதான் நிக்கிது முப்பத்தைந்தும் அதுக்கதான் நிக்குது நாப்பத்தைந்தும் அதுக்கதான் நிக்குது அம்பத்தைந்தும் அதுக்கதான் நிக்குது அறுபத்தைந்தும்... அதுக்கதான் நிக்குது.'

போன் அளைவது ஒரு தொற்று வியாதி போல. ஒவ்வொரு நாளும் கணிசமான பணம் அதற்கு செலவாகிறது என்பதை கணக்கிட யாரும் வரவில்லை. கோடிக் கணக்கான பணம் இந்தத் தொலை பேசிகளுக்கு செலவிடுவதை யாராவது எண்ணிப் பார்த்ததில்லை. இதன் நிறுவுநர்கள் அள்ளி வழங்கும் அன்பளிப்புகளோ அபாரம்.

அங்கிங்கெனாதபடி எங்கும் போனுக்குள் குனிந்திருக்கு நபர்கள் ஏராளம். ஒவ்வொரு விநாடியும் காசு காசுதான் என்பது தெரிந்தும் ஒவ்வொரு விநாடியும் நாம் உழைப்பதற்கான நேரம் என்பதை உணர்ந்தும், கண்களைத்திறந்து கொண்டே குழியில் விழுந்து கொண்டிருக்கிறோம்.

ஒவ்வொரு நாளும் படுக்கைக்கு போகுமுன், அன்றைய நாளில் எத்தனை மணித்தியாலங்கள் நாம் உழைத்திருக்கிறோம் என்பதை எண்ணிப்பாருங்கள். என் தந்தை மகாத்மா காந்தி பற்றி எனக்கு கதை சொன்னபோது முக்கியமாகச் சொல்வது "ஒவ்வொரு வேளை உணவையும் உண்பதற்கு உட்கார முதல் அதற்கான உழைப்பை செய்து விட்டோமா என்பதை முதலில் எண்ணிப்பார்" இதை நான் என் பிள்ளைகளுக்கும் சொல்லி வளர்த்தேன்.

பெண்களின் திறமையான உழைப்பைப்பற்றிப் போனவாரம் எழுதினேன். என் அயல்வீட்டில் உள்ள வாசகி, நீங்கள் நாங்கள் விடுகிற பிழைகளையும் பேச வெண்டும் என்று கேட்டதால்.. இன்று விதிவிலக்கான பெண்களை சுட்ட வேண்டியதாயிற்று. யாருக்காவது தொப்பி அளவாக இருந்து விட்டால் மன்னிக்கவும். உங்கள் கணவனின் அல்லது குடும்பத்துக்காக உழைப்பவரின் உணர்வுகளை உழைப்பை மதிக்க முயலுங்கள்.



> மரவள்ளியை நீர்ப்பாசனம் மற்றும் மானாவாரியிலும் நடுகை செய்யலாம். மலைப் பிரதேசங்களில் மானாவாரி முறையில் செய்யப்படுகிறது. நீர்ப்பாசன நிலைமைகளின் கீழ் இந்தப் பயிர் ஆண்டு முழுவதும் பயிரிடப்படலாம்.

# மரவள்ளிப் பயிர்ச்செய்கை

**ஆனந்தன் பிரேம்நாந்**
**லக்சி பண்ணை**



இலங்கையில் தீவு முழுவதும் மரவள்ளி வளர்க்கப்படுகிறது. மரவள்ளி கிழங்கின் உற்பத்தி முறைகள் கொல்லைப்புறப் பயிர் என அடையாளம் காணப்பட்டுள்ளன.

இலங்கையில் ஈரவலயத்தில் அதிகளவில் மரவள்ளி பயிர்ச்செய்கை பண்ணப்பட்டு வருகிறது. (கம்பஹா, கொழும்பு, கேகாலை, இரத்தினபுரி, மாத்தளை மாவட்டம் )

இடை வலயத்தில் தென்னை மற்றும் அன்னாசியுடன் ( குருநாகல் மாவட்டம் )

உலர் வலயத்தில் புத்தளம், அனுராதபுரம், அம்பாந்தோட்டை, மொனராகலை போன்ற மாவட்டங்களிலும். மற்றும் வட கிழக்கிலும் மானாவாரி முறையில் பெரிய அளவில் பயிர் செய்யப்படுகின்றது. மகா பருவத்தில் ( செப்டம்பர் - மார்ச் ) உச்ச அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றது

**இலங்கையில் சிபாரிசுசெய்யப்பட்ட வர்க்கங்கள்**

பின்வரும் வர்க்கங்கள் பயிர்ச்செய்கைக்குச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளன. இவை கூடிய காபோவைதரேற்று மற்றும் உலர் பொருள், குறைந்தளவு பிறசிக்கமிலம் கொண்டன.

**1. சுரனிமல (BW 1)**

இது களுத்துறை மாவட்டத்தில் இயற்கையான தெரிவுக்குட்பட்ட ஒரு வர்க்கமாகும். வெள்ளிச் சாம்பல் நிறமான தண்டின் நுனியில் கிளைவிடும். இளம் இலைகள் சிவப்புக் கபில நிறமானதோடு பச்சை நிறமான முதிர்ச்சியடைந்த இலைகள் கடும் செம்மஞ்சள் - சிவப்பு காம்பினைக் கொண்டது. கிழங்குகள் கபில நிறமான வெளித்தோலையும் வெண்ணிறமான கிழங்குகளையும் கொண்ட நீண்டனவாகும். சராசரி விளைச்சல் ஹெக்டயரொன்றிற்கு 35-50 தொன்களாகும்.

**2. ஸ்வர்ணா (BW 2)**

வெள்ளிச் சாம்பல் நிறமான தண்டின் நுனியில் கிளை விடாது. இளம் இலைகள் சிவப்பு கபில நிறமானதோடு பச்சை நிறமான முதிர்ச்சியடைந்த இலைகள் காணப்படும். கடும்சிவப்பு நிறக்காம்பினைக்கொண்டவை.



மத்திய அளவான கிழங்குகளின் வெளித்தோல் கபில நிறமானவை. கிழங்குகள் மஞ்சள் நிறமானவை. சராசரி விளைச்சல் ஹெக்ரெயர் ஒன்றிற்கு 35 - 40 தொன் களாகும்.

**3. ஷானி (BW14)**

இது கொழும்பு மாவட்டத்திலுள்ள விவசாயிகளினால் தெரிவு செய்யப்பட்டதொரு வர்க்கமாகும். கடும் கபில நிறமான தண்டு காலம் செல்ல கிளைவிடும். இலைகளும் காம்பும் பச்சை நிறமானவை. பெரியளவான கிழங்குகளின் வெளித்தோல் கபில நிறமானவை. கிழங்குகள் வெண்ணிறமானவை சராசரி விளைச்சல் ஹெக்டயரொன்றிற்கு 35-40 தொன்களாகும்.

**4. கிரிகாவடி**

குறுகிய காலத்தில் அதிக விளைச்சலைத் தரக் கூடியது. அதிக உலர் பொருளையும் காபோவைதரேற்றையும் கொண்டுள்ளது. குறைவான நச்சுப் பதார்த்தத்தையும், வேறு பல விசேட இயல்புகளையும் கொண்ட இனமாகும்.

ஆறு மாதத்தில் அறுவடை செய்யும் போது 20 தொன் விளைச்சலையும், 11 மாதத்தில் அறுவடை செய்யும் போது 60 தொன் விளைச்சலையும் ஒரு ஹெக்ரயரில் தரக்கூடியது. பருவகாலங்களில் ஈரவலயத்திலும், நீர்ப்பாசனத்தின் கீழ் உலர் வலயத்திலும் செய்கை பண்ண முடியும். இவ் வர்க்கம் கன்னொறுவ மத்திய விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் தாவரவியல் பிரிவினரால் விருத்தி செய்யப்பட்டது. விரைவில் கிளைவிடக் கூடியது. 1.5 மீற்றர் உயரம் வரை வளரும். ஒரு தாவரத்தில் இருந்து 8 - 11 கிழங்குகள் வரை உற்பத்தியாகும்.

கிழங்கின் வெளித்தோலும் உட்தோலும் வெள்ளை நிறமாகக் காணப்படும்.

**5. ஆரு 51 (பேராதனைத் தெரிவு)**

இது உள்ளூர் பேதம் குறைவான கிளைவிடும் தன்மை கலப்புப் பயிர்ச்செய்கைக்கு ஏற்றது. வெள்ளைச் சதையும் ஊதா நிற உட்தோலும் கபில நிற வெளித்தோலும் கொண்டதால் தண்டிலிருந்து அகற்றுதல் இலகுவாகும். இவ்வர்க்கம் ஏற்றுமதிக்கு ஏற்றது.

இதன் சராசரி விளைச்சல் ஹெக்டயரொன்றிற்கு 35-40 தொன்களாகும்.

**6. சி .ஏ. ஆர். ஐ. - 555**

உள்ளூரில் விருத்தி செய்யப்பட்டது. குறைந்த கிளைவிடும் தன்மை கொண்டது. கலப்புப் பயிர்ச் செய்கைக்கு ஏற்றது.

இதன் சதை. பால் போன்ற வெள்ளை நிறமானவை. உட்தோல் மென் ஊதா

நிறமானது. வெளித்தோல் கபில நிறமானது. சமைக்கும் தரம் சிறந்தது.

இதன் சராசரி விளைச்சல் ஹெக்டயரொன்றிற்கு 35-40 தொன்களாகும்.

மரவள்ளி இனங்களில்

4 மாதத்தில் அறுவடை செய்யக்கூடியது
6 மாதத்தில் அறுவடை செய்யக்கூடியது
9 மாதத்தில் அறுவடை செய்யக்கூடியது
12 மாதத்தில் அறுவடை செய்யக்கூடியது

என பல இனங்கள் உள்ளன. இதில் 6 மாதத்திற்கு மேற்பட்ட ரகங்களே சிறப்பானதாக இருக்கும்

### மரவள்ளி - தாவரத்தின் வளரியல்பு

1. தண்டுமூலம் இனப்பெருக்கம் செய்யப்படுகின்றது. தண்டுப் பகுதியை நடவு செய்வதன் மூலம் புதிய தாவரமாக வளர்கிறது. தண்டு முளைக்கும் தன்மையானது இதன் சேமிப்புணவில் தங்கியுள்ளது. முளைகள் தண்டிலிருந்து வளரும்போது அதற்குத் தேவையான உணவு 3 - 4 கிழமைகளுக்கு மட்டும் தண்டிலிருந்து வழங்கப்படுகிறது. பின்பு இலையினூடாக அதன் ஒளித்தொகுப்புச் செயற்பாட்டின் மூலம் கிடைக்கின்றது.

2. தண்டு நடப்பட்டு 3 - 4 நாட்களில் வேர் உண்டாகின்றது. இங்கு இருவிதமான வேர்கள் உண்டாகின்றன. பக்க வேர், ஆணிவேர் ஆகும். ஆணிவேரிலே உணவு சேமிப்பதன் மூலம் கிழங்காக மாறுகிறது.

3. தண்டுகளில் அரும்புகள் நிலத்திற்கு மேலான கணுக்களிலிருந்து உருவாகும். தாவரம் நடப்பட்டு 25ஆம் நாள் தொடக்கம் வேரில் உணவு சேமிப்பு நடைபெறத் தொடங்கும். இது 60ஆம் நாள் மட்டும் விரைவாக நடைபெற்று பின்னர் குறைவடையத் தொடங்கும்.

4. உயர்ந்த நீண்ட தண்டு, நீண்ட இலைக்காம்பு என்பன காணப்படும். தண்டின் நிறம் பச்சை தொடக்கம் சிவப்பு கலந்த அல்லது கடும் சிவப்பு வரை மாறுபட்டுக் காணப்படும்.

5. இலைகள் யாவும் 5 - 7 வரையான பிரிவுகளைக் கொண்டு காணப்படுவதுடன் இவை வர்க்கத்திற்கேற்ப வேறுபட்டுக் காணப்படும்.

மரவள்ளிப் பயிர்செய்கைக்கு ஏற்ற காலநிலை மற்றும் மண்:

மரவள்ளி ஒரு வெப்பமண்டல வேர் பயிர், உற்பத்தி செய்ய குறைந்தது 8 மாதம் வெப்பமான வானிலை தேவைப்படுகிறது.

மரவள்ளியை நீர்ப்பாசனம் மற்றும் மானாவாரியிலும் நடுகை செய்யலாம். மலைப் பிரதேசங்களில் மானாவாரி முறையில் செய்யப்படுகிறது. நீர்ப்பாசன நிலைமைகளின் கீழ் இந்தப் பயிர் ஆண்டு முழுவதும் பயிரிடப்படலாம்.

### காலநிலைத் தேவைகள்

கடல் மட்டத்திலிருந்து 1200 மீற்றர் உயரம் வரையான பிரதேசத்தில் இதனைப் பயிரிடலாம். இப்பயிர் வரட்சியையும் தாங்கக்கூடியது. இது அயனமண்டலத் தாழ்நாட்டிற்கும் ஏற்றது.



சூடான ஈரக் காலநிலையும் 25 - 29 பாகை சென்ரிகிறேட் வெப்பநிலையும் இப்பயிரின் வளர்ச்சிக்கு ஏற்றது.

குளிர்ந்த அல்லது வறண்ட வானிலை போன்ற பாதகமான சூழ்நிலையில் பயிர் உற்பத்தி செய்ய 18 அல்லது அதற்கு மேற்பட்ட மாதங்கள் ஆகும். மரவள்ளி வெள்ளம் உறைபனி நிலைமைகளைப் பொறுத்துக் கொள்ளாது

### மண்

மரவள்ளிப் பயிர்ச்செய்கைக்கு இருவாட்டி மண் சிறந்தது. எனினும் செம்மண், கரிசல் மண்களிலும் இதனைப் பயிரிடலாம். மண்ணில் கார அமிலத் தன்மை pH 4.5 முதல் 8.0 வரை சூரிய வெப்பத்தில் அதிக விளைச்சலை தரும்.

மற்றும் களிமண், வண்டல் மண் ஏற்றவையல்ல.

### நிலம் தயாரித்தல்

மானாவாரி சூழ்நிலையில் பருவமழை தொடங்குவதற்கு முன் பயிரிடச் சிறந்த நேரம்.

பாரம்பரிய முறையில் நிலத்தைப் பண்படுத்தாது மண்ணைக் குவித்து துண்டங்களை கிடையாகவோ அல்லது சாய்வாகவோ நடலாம். பொதுவாக மண்குவியல் 30-60 செ.மீ உயரத்திற்கு குவிக்கப்படும்.

மரவள்ளிச் செய்கைக்கு மண் 25-50 செ.மீ

ஆழம் வரை ஒரு வார இடைவெளியில் 3 முறை நன்கு உழ வேண்டும். பிறகு ஒரு வாரம் கழித்து 10 டன் தொழுவுரத்தைக் கொட்டிப்பரப்பி மண்ணுடன் கலந்து விட வேண்டும். இதன்பின் தண்டுத் துண்டங்கள் மேடையில், வரம்புகளில் நடப்பட வேண்டும்.

### மரவள்ளி நாற்றுகள்

நோய் மற்றும் பூச்சி இல்லாத 8 முதல் 9 மாத முதிர்ந்த 2 முதல் 3 செ.மீ தடிமனான தண்டுகளில் மொத்த நீளத்தில் மேலே இருந்து 1/3 ஐ தவிர்த்து கீழ் பக்கம் அதாவது நடுப் பகுதியிலிருந்து, 20 - 25 செ.மீ நீளமான 4 - 6 தண்டுத் துண்டங்களை வெட்டி எடுக்கலாம்.

நடும் போது தண்டின் 2-3 அரும்புகள் நிலத்திற்கு மேலே விட்டுத் துண்டங்களை செங்குத்தாக மண்ணில் புதைக்கலாம். நடும்போது அரும்புகள் மேல் நோக்கி இருத்தல் அவசியம். எனினும் சில இடங்களில் தண்டு கிடையாகவோ அல்லது ஒரு சரிவாக ஒரு கோணத்திலோ நடப்படுகிறது.

நடவுத்தடி புதிதாக வெட்டப்பட்ட தாகும், நன்கு மொத்தமானதாகவும், காயமற்றதாகவும் இருக்க வேண்டும். தண்டின் நுனிப்பகுதி நடுவதற்கு உகந்ததல்ல. முதிர்ந்த துண்டங்களே அதிகளவில் வேர் விடும் தன்மை கொண்டனவாகும். துண்டங்களைப் பெற்றுக் கொண்ட நாளிலோ அல்லது அடுத்த நாளோ நட வேண்டும்.

20 லிட்டர் பஞ்சகவ்யா கலந்து, அக்கலவையில் விதைக்குச்சியின் முனையை மூழ்க வைத்து நிழலில் 15 நிமிடங்கள் வரை உலர்த்தி நட வேண்டும்.

### நடவு முறை

ஹெக்டயர் ஒன்றிற்கு 12,300 துண்டங்கள் தேவைப்படும் (90 x 90 ச.மீ இடைவெளி)

பொதுவாக மழையுடன் நடுவது சிறந்தது.

உலர் வலயத்தில் பெருமழையுடன் அல்லது நீர்ப்பாசனத்துடன் நடலாம். ஈர வலயத்தில் வருடம் முழுவதும் நடலாம்.

### நடுகை இடைவெளி

1. தனிப்பயிராக அல்லது ஒரு வரிசை மட்டும் இடைப்பயிர்ச் செய்கை பண்ணுவதாயின் கூடிய கிளை விடும் தன்மையுள்ள நடுகைத் துண்டங்களை 120 x 120 செ.மீ.

இடைவெளியிலும், கிளைவிடும் தன்மை குறைந்த துண்டங்களாயின் 90 x 90 செ.மீ. இடைவெளியிலும் நடலாம். ஏற்றுமதிப் பயிர்ச்செய்கைக்கு 60 x 90 செ.மீ. இடை வெளியிலும் நடலாம்.

2. மரவள்ளி நடும் பொழுது சிறுபோக

பயிர்ச்செய்கை முறையாக இருந்தால் 90 × 90 செ.மீ. இடைவெளி இருத்தல் வேண்டும்.

மானாவரிப் பயிர்ச்செய்கை முறையாக இருந்தால் செடிக்குச் செடி 60 × 90 செ.மீ. இடைவெளி இருத்தல் வேண்டும்.

**நீர் மேலாண்மை**

தொடர்ந்து மண்ணின் ஈரப்பதத்துக் கேற்ப தண்ணீர் பாய்ச்சினால் போதும்.

மரவள்ளி நட்ட மூன்றாம் நாள் உயிர்த் தண்ணீர் விட வேண்டும். பின்னர் வளர ஆரம்பித்ததும் ஒரு மாதம் வரை 3 நாள் களுக்கு ஒருமுறையும், பின் 2 ஆம் மாதம் முதல் 7 மாதங்கள் வரை 7 முதல் 10 நாள்களுக்கு ஒரு முறையும், நீர் பாய்ச்ச வேண்டும். அதன்பின் அறுவடை வரை 20 நாள்கள் இடைவெளியிலும் நீர்ப்பாய்ச்ச வேண்டும்.

**களைக்கட்டுப்பாடு**

- தாவரம் தரையை மூடி வளரும் வரை களைகளைக்கட்டுப்படுத்த வேண்டும்.
- கையினால் களைக்கட்டுப்படுத்தல் இலாபகரமானது.
- பயிர் நட்டு முதல் 3 - 4 மாதங்கள் பயிரிடையே களைகள் இல்லாதிருக்க வேண்டும்.
- பொதுவாக 1 - 3 தடவை களைகளைக் கட்டுப்படுத்த வேண்டும்

1. விதைத்த 7-ஆம் நாளுக்கு மேல் முளைப்பு தெரியும்.

2. நட்டு 30-ஆம் நாளில் களை எடுத்து, ஒவ்வொரு செடியின் தூரிலும் ஒரு கைப் பிடி அளவு மண்புழு உரம் வைத்து மண் அணைக்க வேண்டும். அந்தச் சமயத்தில் விதைக் குச்சிகள் முளைக்காத இடங்களில் புதிய குச்சிகளை ஊன்ற வேண்டும்.

3. 45-ஆம் நாள், செடிகளில் நடுக் கிளையை மட்டும் விட்டுவிட்டு மற்ற கிளைகளை அகற்ற வேண்டும். தொடர்ந்து பக்கக் கிளைகளை அகற்றிக்கொண்டே வர வேண்டும். பக்கக் கிளைகள் வளர்ந் தால் கிழங்கு பெருக்காது.

4. 60-ஆம் நாளில் களை எடுத்து.. 200 லிற்றர் ஜீவாமிர்தத்தைப் பாசன நீரில் கலந்து விட வேண்டும். தொடர்ந்து, 20 நாள்களுக்கு ஒருமுறை ஜீவாமிர்தத் தைப் பாசன நீரில் கலந்து விட வேண்டும்.

5. நட்டு 90 ஆம் நாளில் களை எடுத்து ஒவ்வொரு செடியின் தூரிலும் இரண்டு கைப்பிடி அளவு மண்புழு உரம் வைக்க வேண்டும்.

5. 120 ஆம் நாளில் களை எடுத்து... 10 லிற்றர் தண்ணீருக்கு 300 மில்லி பஞ்சகவ்யா என்ற விகிதத்தில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் நிலம் முழுவதும் தெளிக்க வேண்டும்.

இறுதியாகக் களைகட்டலுடன் மண் அணைக்க வேண்டும்.

**இடைப்பயிர்**

தென்னை மரங்களிற்கிடையே ஊடு பயிராகச் செய்கை பண்ணுவதாயின் மரங்களிலிருந்து 2 மீற்றர் தூரத்தில் நடல் வேண்டும்.



கலப்புப் பயிர்செய்கை முறையாக இருந்தால் ஊடுபயிராக சிறிய வெங்காயம், உளுந்து, பச்சைப்பயறு, கௌப்பி மற்றும் கொத்தமல்லி போன்ற குறுகிய காலப் பயிர்களை நடலாம்.

நடவு செய்த 60 தொடக்கம் 90 நாள்க ளில் ஊடுபயிரை அறுவடை செய்து, மேலு ரம் இட்டுப் பின்னர் மண் அணைத்து நீர் பாய்ச்ச வேண்டும்.

**சேதனப் பசளைகள்**

சேதனப் பசளையாக கோழியெரு அல்லது மாட்டெருவை ஒரு ஹெக்டயரிற்கு 10தொன் என்ற அளவில் பயன்படுத்தப் படுகின்றது இதனை நடுவதற்கு 3-5 நாட்களுக்கு முன்னர் பிரயோகிக்க வேண் டும்.

**பூச்சிகள் மற்றும் நோய்கள்: -**

வெள்ளை ஈ:

இவை இலைகளில் சாறை உறிஞ்சி உற்பத்தியைப் பாதிக்கும். மஞ்சள் தேமல் நோயை ஏற்படுத்தும் வைரஸ் கிருமி வெள்ளை ஈ மூலமாகப் பரவும். இதைக் கட்டுப்படுத்த வேப்பம் எண்ணை 1 லிட்டர் நீருக்கு 30 மில்லி அளவிலும், ஒட்டும் திரவம் 1 மி.லி அளவிலும் கலந்து தெளிக் கலாம்.

**மாவுப்பூச்சி:**

மரவள்ளியின் இளம் தளிர், தண்டு மற்றும் இலையின் அடிப் பரப்பிலிருந்து காற்றை உறிஞ்சி சேதப்படுத்தும்.

நுனிக் குருத்துகள் உருமாறி வளர்ச்சி குன்றி காணப்படும். இடைக் கணுக்களின் நீளம் குறைந்து தண்டுகள் சிதைவடை யும். இதைக் கட்டுப்படுத்த அசிரோபாகஸ் பப்பாயே என்னும் நன்மை செய்யும் ஒட் டுண்ணியை ஏக்கருக்கு 100 எண்ணிக் கையில் விடலாம். மாலத்தியான் பூச்சிக் கொல்லி 1 லிட்டர் நீருக்கு 1 மி.லி அளவில் கலந்துதெளிக்கலாம்.

**இலைப்புள்ளி நோய்:**

பூஞ்சை மூலம் ஏற்படக்கூடிய இந் நோய் பாதித்த இலைகளில் பழுப்பு நிறப் புள்ளிகள் காணப்படும். இதைக் கட்டுப் படுத்த மாங்கோசெப் பூஞ்சாணக் கொல் லியை 1 லிட்டர் நீருக்கு 2 கிராம் கலந்து 15 நாள் இடைவெளியில் இருமுறை தெளிக்கலாம்.

**கிழங்கு அழுகல்:**

நீர் தேங்கும் பகுதிகளில் கிழங்குகள் அழுகிவிடும். அதனால் முறையான வடி கால் வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண் டும். டிரைக்கோடெர்மா ஆஸ்பரெல்லம் உயிரிப் பூஞ்சாணத்தை ஏக்கருக்கு 1 கிலோ அளவில் நடவு செய்த உடனேயும் 3, 6-வது மாதங்களில் நிலத்தில் ஈரப்பதம் இருக்கும்போது எருவுடன் கலந்து தூவ வேண்டும்.

**அறுவடை**

பயிரின் முதிர்ச்சிக்காலம் 8-10 மாதங் களாகும். எனினும் சில சமயம் விரும்பிய நேரம் அறுவடை செய்யலாம்.

மரவள்ளிக் கிழங்கை 9 முதல் 10 மாதங்களுக்குள் அறுவடை செய்துவிட வேண்டும். இதற்குமேல் தாமதமானால் கிழங்குகள் முற்றி வேர்கள் தடித்துவிடும். அதை சிப்ஸ் செய்யவோ, சவ்வரிசி செய் வதற்கோ இயலாது.

**அறுவடைக்கான அறிகுறிகள்.**

10 ஆம் மாதத்துக்கு மேல் இலைகள் மஞ்சள் கலந்த பழுப்பு நிறமாகி உதிர ஆரம்பிக்கும். நிலத்தில் வெடிப்புகள் காணப்படும்.

அறுவடை செய்வதற்கு நான்கு அல் லது ஐந்து நாள்களுக்கு முன் நீர் பாய்ச்ச வேண்டும்.

தாவரத்தைக் கவனமாகக் கிழங்கு முறியாது பிடுங்குதல் அவசியம். மண் கடினமாக இருப்பின் கிழங்குகள் சேதம டைவதைத் தவிர்ப்பதற்கு பிடுங்க முன் தாவரங்களைச் சுற்றியுள்ள மண் ஓரளவு அகற்றப்பட வேண்டும்.

இங்கு பயிரை ஒரே நேரத்தில் அறு வடை செய்ய வேண்டிய அவசியமில்லை.

பொதுவாக அறுவடை செய்த கிழங்கு களை மீண்டும் மண்ணுள் புதைத்து 10 நாட்கள் வரை சேமிக்கலாம்.

அடுத்த விதைப்புக்கு செடிகளிலிருந்தே விதைக் குச்சிகளை எடுத்து வைத்துக் கொள்ளலாம்.

**உற்பத்தி & விளைச்சல்**

காலநிலை நிலைமைகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பயிர்ச்செய்கை உள் ளிட்ட பல காரணிகளைப் பொறுத்தது. வழக்கமாக கலப்பின / அதிக விளைச்சல் தரும் வகைகள் ஒரு ஹெக்டேருக்கு 30 முதல் 40 டன் வரை உற்பத்தி செய்கின் றன, குறுகிய காலத்திற்குள் ஹெக்டேயருக்கு 25 முதல் 30 டன் உற்பத்தி செய்யலாம்.

கிழங்கின் சராசரி நிறை, ஒரு தாவரத் திலுள்ள கிழங்குகளின் எண்ணிக்கை, ஒரு ஹெக்டயரிலுள்ள தாவரங்களின் எண்ணிக்கை என்பவற்றைப் பொறுத்து விளைச்சல் வேறுபடலாம்.

மேலதிக ஆலோசனை தேவை எனில் தொலைபேசி ஊடாக எம்மோ தொடர்பு கொள்ளவும்.

Ph: 0770239784
WhatsApp:0769196445



# பணத்தின் நிர்வாகம் ஏன் முக்கியமானது?

சோம வள்ளியப்பன்

> “பலருக்குப் பணத்தை எப்படிக் கையாள்வது என்பது தெரியவில்லை. அந்த பலரில் மெத்தப் படித்தவர்களும், வசதியானவர்களும் உண்டு. தவிர, அவர்களில் பலருக்கு, தங்களுக்குப் பண நிர்வாகம் குறித்துத் தெரியவில்லை என்பதே தெரியவில்லை. ‘கஞ்சி குடிப்பதற்கு இலார் அதன் காரணங்கள் இவை என்னும் அறிவும் இலார்’ என்று பாரதியார் பாடியதைப் போல ‘அன்கான்ஷியஸ் இன்காம்பிடென்ஸ்’ இல் பலர் இருக்கிறார்கள்.”

‘உலகத்தார் இருக்கிறது என்று சொல்வதைத் தன் அறியாமையால் இல்லை என்று சொல்பவன், உலகத்தாரால் பேயாக கருதி ஒதுக்கி வைக்கப்படுவான்’ என்பது வள்ளுவம் சொல்லும் 1,330 முத்துக்களில் 850 ஆவது முத்து.

உலகத்தார் உண்டு என்று சொல்லும் பலவற்றுள் முக்கிய ஒன்று பணம். அது இல்லாமல் இங்கு எதுவும் அசையாது. முற்றும் துறந்தவர்கள் நடத்தும் மடங்கள் கூட பணம் இல்லாவிட்டால் முடங்கிப்போகும். பணம் ஈட்டும் முறைகள் சரியானதாக இருக்க வேண்டும் என்பதுதான் முக்கியமே தவிர, பணமோ, பொருளீட்டுவதோ தவறு அல்ல. பணம் இல்லாமல் தனி நபர்கள், குடும்பங்கள், நிறுவனங்கள், அமைப்புக்கள், கட்சிகள், தேசங்கள் எதுவுமே வாழவோ, வளர்ச்சி காணவோ முடியாது.

அதனால்தான் ‘பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு’ . ‘செல்வரை எல்லாரும் செய்வர் சிறப்பு’ என்றெல்லாம் மென்மையாகச் சொன்ன திருவள்ளுவர், பின்பு ‘பணம் சம்பாதியுங்கள்’ என்பதை, ‘செய்க பொருளை’ என்று ஒரு கட்டளை போலச் சொல்கிறார்.

நம்மை ஏளனமாகப் பார்ப்பவர்கள் கர்வத்தை அடக்கப் பணத்தைவிட கூர்மையான ஆயுதம் வேறு இல்லை என்று காரணமும் சொல்கிறார். இந்த டிஜிட்டல் காலத்தில் வாழ ‘உணவு. உடை, வீடு’ என்பவை மட்டும் போதா. இன்னும் பல தேவைகள் உருவாகிவிட்டன. அவற்றில் பல இல்லாவிட்டாலும் பரவாயில்லை என்று சமாளித்துக் கொள்ளக்கூடிய வசதிகளோ, எனக்கெதற்கு என்று தவிர்க்க வேண்டிய ஆடம்பரங்களோ இல்லை.

செல்போன், காப்புறுதி, சொந்த வாகனங்கள் இல்லாமல் வாழ்வது சுலபமா? உயர் கல்வி, மருத்துவம், பாதுகாப்பான பயணம், சுயதொழில், சுற்றுலா, பிறர்க்கு உதவி எனத் தனக்கு செய்துகொள்ள, பிறருக்கு செய்ய பணம் தேவைப்படுகிறது.

‘சம்பாதிக்க ஆரம்பித்தபின் நீங்கள் உணரும் வேறுபாடு என்ன?’ என்று கேட்டபோது ஓர் இளைஞர் சொன்னது, “பர்ஸில் எவ்வளவு பணம் இருக்கிறது என்று யோசித்து யோசித்து ஓட்டலில் சாப்பிடுவது போய், வேண்டியதை தைரியமாக சாப்பிடமுடிகிறது” என்றார். பலருக்கு அந்த இளைஞர் சொன்னது வியப்பாக இருக்கும். இப்படிக்கூடவா! என்று தோன்றும். இல்லாதவர்களுடைய வலியை, ஒரு போதும் அதற்காக சிரமப்படாதவர்களால் உணர முடியாது.

ஒருமுறை வாடகைக் காரில் பயணப்பட்டபோது, வண்டி ஓட்டியவரிடம் பேச்சுக்

# கால்நடை மருத்துவத்தில் சட்ட விரோதச் சிகிச்சையாளர்கள்






Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர், செட்டிகுளம்

> “நாய்களுக்குத் தடுப்பூசி வழங்கும் போது என்ன நடக்கின்றன எனப் பார்ப்போம். தடுப்பூசி வீரியம் குறைக்கப்பட்ட அல்லது கொல்லப்பட்ட வைரஸ்ஃ நுண்ணங்கியை கொண்டிருக்கும். அதனை செலுத்தும் போது அது செலுத்தப்பட்ட உயிரியில் பல உடலியல் செயற்பாடுகளை தூண்டி நோய் எதிர்ப்பு செயற்பாடுகளை ஆரம்பிக்கும்.”

கடந்த வாரம் கால்நடை மருத்துவத்தில் உள்ள சில சட்டவிரோத சிகிச்சையாளர்கள் பற்றி சொல்லியிருந்தேன். இந்த வாரம் அதன் தொடர்ச்சியைப் பார்ப்போம்.

சில நாட்களுக்கு முன் எனது சிகிச்சை நிலையத்துக்கு ரொட்வைலர் வகை நாயொன்று கொண்டு வரப்பட்டிருந்தது. அதன் நெஞ்சை அண்மித்த தோல் பகுதியில் மிகப்பெரிய சீழ்க் கட்டி உருவாகியிருந்தது. சில வாரத்துக்கு முன் சுகாதார திணைக்களத்தால் வெறிநாய்க்கடி நோய்க்கு வழங்கப்பட்ட ARV தடுப்பூசியின் பின்னர்தான் அந்த ஊசி போடப்பட்ட இடத்தில் இந்த சீழ்கட்டி தோன்றியிருக்கிறது. இந்த வகை நாய்கள் கடி நாய் என்பதால் பயத்தில் 18 G எனப்படும் மொத்தமான ஊசியால் குத்தப்பட்டிருக்கிறது.

நல்ல வேளை குத்திய குத்தில் இதயம் துளைக்கப்படவில்லை. அந்தப் பகுதியில் உள்ள தசை கிழிக்கப்பட்டு சீழ்க்கட்டி தோன்றியுள்ளது. இந்த நாய்க்கு உரிமையாளர் தான் கால்நடை வைத்தியரிடம்தான் காட்டுவேன்,தடுப்பூசி போடுவேன் என கூறிய போதும் கட்டாயம் தங்களிடம்தான் போட வேண்டும், தவறினால் சட்ட நடவடிக்கை என அச்சுறுத்தியே இந்த சம்பவத்தை செய்துள்ளனர். ஒருவாறு நாயை மயக்கி அந்த சீழ்க்கட்டியை சுத்தம் செய்தோம்.


இன்னொரு சம்பவம், ஒரு வருடத்துக்கு முன் நான் பணிபுரியும் செட்டிகுளம் கால்நடை பிரிவிலுள்ள கன்னாட்டி கிராமத்திலிருந்து தொடர்ச்சியாக **Distemper** எனும் நோய் ஏற்பட்ட நாய்கள் வரத் தொடங்கின. இந்த நோய் ஓர் உயிர்க்கொல்லி வைரஸ் தொற்று நோய். பெரும்பாலான நாய்கள் இறந்துவிடும். தப்பும் நாய்கள் நிரந்தர நரம்பு பாதிப்பை அடையும். பொதுவாக ஊர்களில் சுகாதார திணைக்கள வெறிநாய்க்கடி தடுப்பூசி செலுத்திய சில வாரங்களில் இந்த நோய் அறிகுறிகளை காணமுடியும். நோய்ப்பட்ட நாய்க்கு பாவிக்கும் ஊசியை இன்னொரு நாய்க்கு பாவிப்பதால் இந்த நிலை தோன்றுகிறது. தடுப்பூசி செலுத்தவென பல நாய்கள் அந்த இடத்துக்கு வருவதால் இலகுவில் இந்த நோய் ஏற்படுகிறது. தடுப்பூசி செலுத்தும் இந்த செயற்பாடு எப்படி சட்ட விரோதம், தடுப்பூசியாளர்கள் போலி சிகிச்சையாளராகுவார்கள் என தற்போது உங்களுக்குள் ஐயம் எழலாம். அங்குதான் வருகிறேன்.

சுகாதார திணைக்கள தடுப்பூசியாளர்கள் வெறுமனே தமக்கு பணிக்கப்பட்டுள்ள **ARV** தடுப்பூசியை மட்டும் வழங்குவதில்லை. அதற்கு மேலதிகமாக தமது வருமானத்தை அதிகரிக்க களவாக தோல் நோய் சிகிச்சையையும், **dippo provera** எனும் கருத்தடை சிகிச்சையையும் செய்கின்றனர். தடுப்பூசி போட வரும் நாய் உரிமையாளரின் தொலைபேசி இலக்கங்களை வாங்கி மேலதிக நோய் சிகிச்சைகள், ஏனைய தடுப்பூசிகளை வழங்கச் சொல்கின்றனர். எனக்கு தெரிந்த ஒரு தடுப்பூசியாளர் ஆண் நாய்களுக்கு கருத்தடைச் சத்திர சிகிச்சையையும் செய்கிறார். இந்த இடங்கள்தான் சட்ட விரோதமாக மாறுகின்றன. தடுப்பூசியாளர் சட்டவிரோத சிகிச்சையாளராகிறார்.

நாய்களுக்கு தடுப்பூசி வழங்கும் போது என்ன நடக்கின்றன எனப் பார்ப்போம். தடுப்பூசி வீரியம் குறைக்கப்பட்ட அல்லது கொல்லப்பட்ட வைரஸ்ஃ நுண்ணங்கியை கொண்டிருக்கும். அதனைச் செலுத்தும் போது அது செலுத்தப்பட்ட உயிரியில் பல

உடலியல் செயற்பாடுகளை தூண்டி நோய் எதிர்ப்பு செயற்பாடுகளை ஆரம்பிக்கும். இதன் போது சில வேளைகளில் காய்ச்சல் வரலாம்.உடல் அசதி தோன்றும்.இதனை கொரோனா தடுப்பூசிக் காலத்தில் நிச்சயம் நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். அது போலத் தான் நாய்களுக்கு வழங்கப்படும் இந்த ARV தடுப்பூசியும் செயற்படும்.தடுப்பூசி செலுத்தப்பட்ட நாயக்கு காய்சல் வரும். சாப்பிடாது. இந்தச் தடுப்பூசி செலுத்தப்பட்ட நாய்க்கு எந்த கால்நடை வைத்தியரும் தேவையற்ற விதத்தில் வேறு மருந்து களையோ சிகிச்சையையோ செய்ய மாட் டார்கள்.

இந்த தடுப்பூசிக்காரர்களோ தாம் வழங்கும் ARV க்கு மேலதிகமாக தோல் நோய் சிகிச்சை மருந்தையும் வழங்கு கின்றனர்.இதற்காக 200-300 பணமும் அறவிடுகின்றனர்.வருகின்ற உரிமையா ளரிடம் மெதுவாக பேசி இந்த தோல் நோய் ஊசியையும் செலுத்தி பணம் பெற்று விடுவார்கள்.பல உரிமையாளர்கள் ARV ஊசி போடும் போது தோல் நோய் ஊசியும் கட்டாயம் என்ற வகையிலேயே நினைத் துக் கொண்டிருக்கிறார்கள். இந்த தோல் நோய் ஊசி மருந்து அடிப்படையில் ஆடு மாடு போன்ற பண்ணை விலங்குகளின் பாவனைக்குரியது.மேலதிகமாகவே ( off label use) நாய்களுக்கு வழங்கப்படுகிறது.



சில வகை நாய்களுக்கு உயிராபத்தை தர வல்லது.குறிப்பாக நரம்பு தொகுதியை பாதிக்க வல்லது.சிறிய நாய்கள்,குறிப்பாக நரம்புத்தொகுதி முற்றாக வளர்ச்சியடை யாத நாய்களுக்கும் உகந்தது கிடையாது. இந்த மருந்தால் பாதிக்கப்பட்ட பல நாய் களை நான் பார்த்திருக்கிறேன்.இதற்கு மாற்று சிகிச்சையே கிடையாது.மரணம் நிச்சயம்.தொடர்ச்சியான இந்த மருந்தின் பாவனை ஈரல் மற்றும் சிறுநீரங்களைப் பாதிக்கும்.உங்கள் நாயின் உடலில் micro filaria போன்ற உயிரிகள் இருந்தால் அவை பொறுத்த இரத்தக் குழாய்களில்



அடைப்பை ஏற்படுத்தலாம்.குறிப்பாக மூளையிலுள்ள இரத்தக் குழாய்கள் அடைபட்டால் பாரிசவாதம் கூட ஏற்படலாம். இந்த நிலையில் ARV தடுப்பூசியுடன் பாவிப் பது இன்னும் ஆபத்தானது.சிலவேளைக ளில் ARV தடுப்பூசியைச் செயலிழக்கவும் செய்யலாம்.

இந்தத் தோல் நோய் மருந்து குப்பிகள் மூலம் தான் பல நோய்கள் பரவுகின்றன. ARV தடுப்பூசிக்கு ஊசிக் குழாய்கள் அரசால் வழங்கப்பட்டாலும் தோல் நோய் மருந்தை ஒரே ஊசியை பயன்படுத்த வேண்டும். ஒரு நாய்க்கு செலுத்திய ஊசியை இன் னொரு நாய்க்கு பயன்படுத்துவர்.பின் அதே ஊசியை பயன்படுத்தி மருந்துக் குப் பிக்குள் மறுபடி மருந்து எடுப்பர்.இதனால் Distemper போன்ற நோய்கள் இலகுவில் பரவும்.நாய்களின் இறப்பு ஏற்படும்.இது தொடர்பாக பல்தடவை அந்தந்த பிரிவு சுகாதார வைத்திய அதிகாரிகளிடம் சொல்லியும் பெரியளவு பலன் கிடைப் பதில்லை.களவாக தமது வேலைகளை செய்து விடுகின்றனர்.

நாய்கள் குறிப்பாக,நல்லின நாய்கள் வெப்பமான காலம் தொடங்க முன்னும் குளிர்காலம் தொடங்க முன்னும் உரோ மத்தை உதிர்க்கும். அதாவது காலநிலையை தாக்குப் பிடிக்க கூடிய வகையிலான இயற்கையின் ஏற்பாடு. இப்படியிருக்க, தடுப்பூசிக்கு வரும் நாய்கள் சாதாரணமாக உரோமத்தை உதிர்த்தாலே போதும் ஊசியை போட்டு விடுவார்கள்.அதாவது சாதாரண முடி உதிர்வை அசாதாரண தோல் நோயாக்கி விடுவார்கள். சிலரிடம் தடுப்பூசியை போல தோல் நோய் வராமல் ஊசி போட வேண்டும் என சொல்லி பணத்தை கறந்து விடுவார்கள். உண்மை யில் தோலில் வரும் சிறிய ஒட்டுண்ணிப் பூச்சிகளின் தாக்கத்தால் ஏற்படும் தோல் நோய்க்குத்தான் அவர்கள் பாவிக்கும் குட்டை ஊசி வேலை செய்யும்.மற்றப்படி சத்துக் குறைவு, ஓமோன் குறைவு போன்ற காரணிகளுக்கு அந்த ஊசி பலன் தராது. அந்த குட்டை மாறாத சந்தர்ப்பங்களில் பல சோதனைகளை செய்து மருந்தை மாற்ற வேண்டும். அதை விடுத்து குட்டை ஊசியை மீள மீள வழங்கினால் நான் முன்பு கூறி யது போல நாய்களின் சிறுநீரகம், ஈரல் போன்ற உறுப்புகள் பாதிக்கப்படும். நீண்ட காலம் வாழத்தக்க உங்கள் செல்லப் பிரா ணிகள் அற்ப ஆயுளில் இறந்து போக நேரிடும்.

இந்த தோல் நோய் மருந்துகள் இவர் களுக்கு எப்படி கிடைக்கின்றன என கேள்வி வரலாம்.நான் கடந்த வாரம் கூறியது போல பல கால்நடை மருந்துகளை யாரும் பெறத்தக்க நிலைதான் இலங்கையில் உள்ளது. விற்று பணமாக்கினால் சரி எனும் சிந்தையுள்ள பண்ணைக் கடை கள், கால்நடை வைத்தியர்கள் மூலம் இந்த மாதிரியான தடுப்பூசிக் காரர்கள் மருந்துகளை பெற்றுக் கொள்கின்றனர். கடந்த வருடம் பொருளாதார நெருக்கடி நாட்களில் மேற்படி மருந்துக்கு தட்டுப்பாடு நிலவியது.கால்நடை வைத்தியர்களிடம் மாத்திரமே இருந்தது.இந்த நிலையில் தடுப்பூசிக் காரர்கள் இந்த மருந்தைப் பெற பல கால்நடை சிகிச்சை நிலையங்களுக்கு அலைந்து திரிந்ததை காண முடிந்தது. பலரைக் கொண்டு மாவட்டம் விட்டு மாவட்டமும் சென்று பல கால்நடை வைத் தியர்களிடம் சென்று கேட்டிருந்தனர். வவுனியா தடுப்பூசிக் காரர் ஒருவர் மட் டக்களப்பில் உள்ள சக கால்நடை வைத் தியரிடம் சென்று கேட்டிருக்கிறார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். ஒரு கால்நடை வைத்தியருக்கு மருந்து தேவை என அவர் என்னிடம் விபரத்தை கேட்க நான் விசாரித்துவிட்டு உண்மையை சொல்லி தடுத்து விட்டேன்.

உண்மையில் இந்தப் பிரச்சனையை தீர்ப்பது சற்று சிரமமானது. பொதுமக்கள் தமது செல்லப்பிராணிகள் மற்றும் கால் நடைகளுக்கு யார் சிகிச்சை தர வேண்டும் என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். முறையற்ற நபர்களின் சிகிச் சையால் ஏற்படும் விலங்குகளின் இழப்பை உணர வேண்டும்.அடுத்த வாரம் இது தொடர்பாக இன்னொரு விடயத்தை பார்ப் போம்.

# உபசரிப்பும் உற்பத்தித் திறனும்



"உபசரிப்பு என்பது உற்பத்தித் திறனைத் தீர்மானிக்கும் ஒன்று. பணியாளர் நலன்புரியைச் சரியாகவும் தரமாகவும் செய்தால் தான் உற்பத்திகள் மேம்படும். "பச்சத் தண்ணியில் பலகாரம் சுட்டு மிச்சத் தண்ணியில் முறுக்கும் சுட வேண்டும்" எனும் பலரோ சிலரோ உண்டு. உற்பத்தியில் ஈடுபடுவோரைச் சரியாக உபசரித்தால் தான் உற்பத்திகள் உயரும். பொருளாதாரமும் மேம்படும்."



**வேதநாயகம் தபேந்திரன்**

2016 ஆம் ஆண்டு. அந்தக் கட்டிடத் திறப்பு விழா நடத்துவதற்குத் திகதி தீர் மானிக்கப்பட்டது. புதிய கட்டிடம் அமைந் துள்ள வீதியின் 300 மீற்றர் தூரத்துக்கு வீதியின் இருகரையும் அடர் பற்றைகள். சில மரங்கள். அவற்றை வெட்டி அகற்ற வேண்டும்.

சிறுகுற்றம் செய்தவர்களை விளக்க மறியலில் வைக்காமல் சமூக சேவை செய்ய வேண்டுமென நாள்களை ஒதுக்கி நீதிமன்றத்தால் விடுதலை செய்வார்கள். நீதிமன்றத்திலுள்ள சமுதாய சீர்திருத்தப் பிரிவு மூலமாக ஐந்து பேரைத் தருமாறு கேட்டேன். உரிய நாளில் ஐந்து பேரைத் தந்தார்கள்.

காலை 8.30 மணிக்கு அவர்களைப் பொறுப்பேற்றேன். வேலை இடத்துக்கு அழைத்துச் சென்றேன். காலையில் உணவு உண்டார்களோ தெரியாது. எல்லோருக்கும் பால் தேநீர், சமுசா ஒன்று கொடுத்தேன்.

வயிறு குளிர்ந்ததும் மண்வெட்டி, கோடாலி, அலவாங்கு, பிக்கான் பிடித்து வேலையை மிகவும் உற்சாகமாக ஆரம்பித்தார்கள்.

இரண்டு லீற்றர் தண்ணீர்ப் போத்தல் களை வாங்கி ஆளுக்கு ஒன்று கொடுத் தேன். நானும் ஓர் ஆளாக அருகில் நின் றேன்.

காலை 10 மணிக்கு பிளேன் ரீ, வடை கொடுத்தேன். உற்சாகம் குறையாமல் வேலை செய்தார்கள்.

நண்பகல் 12 மணிக்கு தேசிக்காய் தண்ணீர் நிறையக் கரைத்துத் தாராளமா கப் பருகக் கொடுத்தேன்.

வெய்யில் கடுமைக்கு மிகவும் இதமாக இருந்தது. மத்தியானச் சாப்பாடு என்ன தெரிவு எனக் கேட்டேன். கொத்து றொட்டி கேட்டவருக்குக் கொத்து றொட்டி, பிறைட் றைஸ் கேட்டவருக்குப் பிறைட் றைஸ். கூடவே லெக் பீஸ் எனப்படும் பொரித்த கோழி இறைச்சித் துண்டு, அவித்த முட்டை யும் கொடுத்தேன்.

சாப்பிட்டு முடியக் கொக்கோ கோலாச் சோடா ஒரு கப். மதிய உணவு முடிய அரை மணித்தியாலம் ஓய்வு எடுக்கச் சொன்னேன்.

ஓய்வு முடிந்ததும் வேலைக்குரிய ஆயுதங்களை எடுத்தனர். " சேர், சட்டப்படி கவனிக்கின்றார். இண்டைக்கு முழு வேலையும் முடிச்சுத் தான் வீட்ட போறது" எனக் கூவிக் கூவி வெகு உற்சாகமாவும் தரமாகவும் வேலை செய்தனர்.

பிற்பகல் 3 மணி போல ஆளுக்கொரு மைலோ யூஸ் பக்கெற் கொடுத்தேன். மாலை 4 மணியளவில் வேலை முடிந் தது. முடியும் போது ஆளுக்கொரு பிளேன் ரீயும், றோள்சும் கொடுத்தேன்.

அவர்களது வரவுத் தாளில் கையொப்ப மும் வைத்துக் கொடுத்தேன். " சேர், இனி வேலை எண்டால் சொல்லுங்கோ. இஞ்ச வாறம். நீங்கள் தான் எங்களை மனுசனாய் மதிச்சது. கன சனங்கள் குடிக்கப் பச்சத்தண் ணியும் தராதுகள்" எனப் போற்றிச் சென் றார்கள்.

ஐந்து பேருக்குரிய நாள் கூலி கொடுக்கும் காசு தான் எனக்கு உபசரிப்புக்கு மொத்த மாகச் செலவழிந்தது. ஆனால் ஐந்து பேரைப் பாவித்து இரண்டு நாள்கள் செய் யும் வேலை ஒரே நாளில் முடிந்தது

உபசரிப்பு என்பது உற்பத்தித் திற னைத் தீர்மானிக்கும் ஒன்று. பணியாளர் நலன் புரியைச் சரியாகவும் தரமாக வும் செய்தால் தான் உற்பத்திகள் மேம்ப டும்.

"பச்சத் தண்ணியில் பலகாரம் சுட்டு மிச்சத் தண்ணியில் முறுக்கும் சுட வேண் டும் " எனும் பலரோ சிலரோ உண்டு.

உற்பத்தியில் ஈடுபடுவோரைச் சரியாக உபசரித்தால் தான் உற்பத்திகள் உயரும். பொருளாதாரமும் மேம்படும்.




கொடுத்தேன். டிப்ளோமா படித்தவர். உக்கிரமமான வெய்யில் இருக்கும் தூரதேசம் ஒன்றில், கொஞ்சமும் சுவாரசியம் இல்லாத, நாளொன்றுக்கு 14 மணி நேரத்திற்கு மேல், கடுமையான அதிக உடலுழைப்பு தேவைப்பட்ட வேலையை ஒருவருடைய வீட்டில் செய்ததாக சொன்னார். அப்போது பழக்கமில்லாத உணவை சாப்பிட்டுக் கொண்டு, கிடைத்த கொஞ்ச நேரத்திலும் சொந்த ஊரையும் உறவுகளையும் நினைத்துக்கொண்டு தூங்க முடியாமல் தவித்ததாகவும் கூறினார்.

வெளிநாட்டு நிறுவனம் ஒன்றில் சாரதி வேலை பெற, முகவருக்கு பெருமளவு தரகுக்கு தொகை கொடுக்கவேண்டி, பெரிய வட்டிக்கு கடன் வாங்கினார். போனவரை நிறுவன வேலையில் சேர்க்கவில்லை. நிறுவன முதலாளியின் வீட்டில், எல்லா வேலைகளையும் செய்யச் சொன்னார்கள். 4 ஆண்டுகள் வெளிவரமுடியவில்லை. சம்பாதித்த பணம் அசலுக்கும் வட்டிக்கும் சரியாக இருந்தது.

தப்பித்தோம் பிழைத்தோம் என்று வந்து சேர்ந்திருக்கிறார். வசிக்க நினைக்கிற ஊரில் இருக்க, விரும்பும் வேலையை செய்ய, பிடிக்காதவற்றைத் தவிர்க்கவெல்லாம் எல்லோராலும் முடியாது. பணம் இருந்தால்தான் அந்த சுதந்திரம் கிடைக்கும். பணம் இல்லாதவர்கள் உடல் சிரமங்களை மட்டுமல்ல, ஏளனங்களையும் அவமானங்களையும் பொறுத்துக்கொள்ள வேண்டி வரும். தகுதியற்றவர் அதிகாரங்களுக்கு கட்டுப்பட வேண்டியிருக்கும். பணம் பலவற்றைப் பெற்றுத் தரும் வல்லமை உடையது.

நமக்காக.குடும்பத்திற்காக.பெற்றோருக்காக. மற்றவர்களுக்கு உதவுவதற்காக என்று பணத்திற்கு பல தேவைகள் இருக்கின்றன. பெரும் பணம் அவசியமில்லை தான். அதே சமயம் அவசியங்களுக்கு பணம் இல்லாமல் முடியாது.

பல்வேறு நிறுவன ஊழியர்கள் மற்றும் என்னை தொடர்பு கொண்டவர்கள் என்று குறைந்தபட்சம் சில ஆயிரம் நபர்களை சந்தித்திருக்கிறேன். அப்போது அவர்களுடைய நிதிநிலை குறித்து தெரிந்து கொள்ளவும் பேசவும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

அந்த அனுபவங்களை வைத்து பொதுவாக சொல்வதென்றால், இப்படிச் சொல்வேன். பலருக்கு பணத்தை எப்படி கையாள்வது என்பது தெரியவில்லை. அந்த பலரில் மெத்தப் படித்தவர்களும், வசதியானவர்களும் உண்டு. தவிர, அவர்களில் பலருக்கு, தங்களுக்கு பண நிர்வாகம் குறித்து தெரியவில்லை என்பதே தெரியவில்லை. 'கஞ்சி குடிப்பதற்கு இலார் அதன் காரணங்கள் இவை என்னும் அறிவும் இலார்' என்று பாரதியார் பாடியதைப் போல பலர் இருக்கிறார்கள்.

எல்லா மட்டங்களிலும். சிலர் செய்வதை கவனமாக, நேர்த்தியாக மிகச் சரியாகக் கூட செய்வார்கள். ஆனால், அதை செய்வது அவசியம்தானா, அல்லது வேறு எதுவும் செய்ய வேண்டுமா? என்பது போன்ற 'பெரும் பார்வை' (பிக் பிக்ச்சர் வியு) இல்லாமல் இருக்கிறார்கள்.

நிதி விஷயத்திலும், கேள்விப்பட்டது, பார்த்தது, படித்தது என்று பலவற்றையும் செய்கிறார்கள், பின்விளைவுகள் தெரியாமலே. மூன்றாவதாக பலரிடமும் காணப்படும் ஒரு பொதுவான விஷயம் அவர்கள் நிதிசார் முடிவுகளை ஒரு மொத்தத் திட்டத்தின் பகுதிகளாக செய்வதில்லை. அவ்வப்போது கையில் பணம் கிடைக்கும்போது, அல்லது எவரேனும் கட்டாயப்படுத்தும்போது 'ரியாக்டிவ்' ஆக செய்வார்கள். இதை 'பிட்ஸ் ரூ பீசஸ்' அணுகுமுறை எனலாம்.





# எங்கட ஆச்சி



- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -

எங்கட வாரிவளவுப் பிள்ளையாற்றை தீத்தத்திருவிழா அண்டைக்கு தீத்தம் ஆடுறது வியாவில் தீத்தக்கரை எண்டிற ஜயனார் கோவில் தீரத்தக்கரையில நடக்கும். உதுக்கெண்டு பிள்ளையார் விடியக் காலமையே ஊர்வலமா தீர்த்தக்கரைக்கு வெளிக்கிட்டுவிடுவார். பேந்தும் தீத்தம் முடிய ஊர்வலமா வருவார். அப்பிடி வரேக்கை படலை வழியை ஆக்கள் அவல், கடலை, அப்பம், வடை, மோதகம் எண்டு படைச்சுப் பூசை செய்வினம். உப்பிடி ஆக்கள் படைக்கிறவை எண்டதாலேயே போகேக்கை கொஞ்சப் பேரோடை ஊர்வலம் போற எங்கட பிள்ளையாரோடை வரேக்கை நிறையப் பேர் வருவினம் அதில சில பேர் தீத்தமே ஆடி இருக்க மாட்டாங்கள் .

அப்பிடித்தான் இந்த வரியமும் போய்வரேக்கே எங்கட வெளிநாட்டால வந்த தம்பி ஒருத்தன் இது ரைமை வேஸ்ற் ஆக்கிற வேலை. எத்தினை பேர் வேலை மினக்கெட்டு ஊர்வலம் போய் தங்கட நேரத்தை வீணாக்கினம். அப்பிடித் தீத்தம் ஆட வேணும் எண்டால் கோயில் கிணத்திலை நாலு வாளி தண்ணி அள்ளி ஊத்தினா நேரமும் மிச்சம் செலவும் மிச்சம். அதோட தெருவழியை வைச்சிருக்கிற சாப்பாடுகளை வாங்கி வெறும் கையிலை வைச்சு சாப்பிடுதுகள். எவ்வளவு கிருமியள் பரவி வருத்தம்வாதை வரும் எண்டு கமக்கட்டைச் சொறிஞ்சு மூக்கிலை வச்சு மணந்து போட்டு. வெள்ளைக்காறன் இப்பிடி விசர் வேலை ஒண்டும் செய்யிறேல்லை. அதால தான் அவன் முன்னேறி இருக்கிறான் எண்டான்.

உவன் முந்தி எங்கட கோயில்லை வடை மாலை புக்கை வாங்க ஆளோடை ஆள் நிண்டு அடிபட்ட ஆள்த்தான். அதிலையும் ஐயர் பூசைக்கு வைச்ச நந்திப் புக்கையை எறியேக்கை காகத்துக்கு முந்திப் பாஞ்சு கச் பிடிச்சுத் திண்டவன்தான். ஏன் கனக்கப் போவான் நான் ஒருக்கா பஞ்சாமிர்தம் குடுத்துக்கொண்டு நிக்க பஞ்சாமிர்தத் தட்டத்துக்கை கை வைச்சு அள்ள நான் பஞ்சாமிர்தம் குடுத்த கையாலை முதுகில ஒண்டு நல்லாப் போட குளறிக்கொண்டு ஓடினவன். இப்ப என்னவோ வெள்ளைக்காறன் மாதிரியே கதைக்கிறான். உப்படியான ஆக்களை விட்டால் தன்ரை வேட்டி கட்டின தேப்பன் சரியில்லை எண்டு போட்டு பக்கத்து வீட்டு லோங்க்ஸ் போட்டவனை அப்பா எண்டு கூப்பிடுவாங்கள் போல எண்டு அப்பு சொல்லுறவர் .

அவன் அப்பிடிச்சொல்லவும் பக்கத்திலை நிண்ட வீட்டம்மா என்ரை அவல் நிறைஞ்ச வாயைப்பாத்துச் சிரிக்கிறா. அடிபட்டு வாங்கின அவல் கடலை முடியும் வரையும் நான் வாய்திறக்க மாட்டன் எண்டு அவவுக்குத் தெரியும். உந்தக் கோயில் திருவிழாவில தள்ளுப்பட்டு இடிபட்டு ஏன் சிலநேரம் அடிபட்டு வாங்கித் தின்னிறதில இருக்கிற சுவாரசியம் அதை அனுபவிச்சவைக்குத்தான் தெரியும். இப்பிடி ரெண்டு கையிலையும் நிறைய வாங்கித் தின்னேக்கை வேட்டி இடுப்பில இறுக்கமா நிக்குதோ எண்டு பாக்க வேணும். பேந்து தின்னிற அமளியில வேட்டி கழண்டு விழுகிறதும் தெரியாது.

சரி நான் விசயத்துக்கு வாறன் நான் அவனிட்ட எட தம்பி எங்கட பழைய ஆக்கள் ஒவ்வொரு விசயத்தையும் ஏதோ ஒரு காரணத்தோடதான் செய்திருக்கிறாங்கள். ஆனா மோடங்கள் ஏன் செய்யிறம் எதுக்குச் செய்யிறம் எண்டு சொல்லாமப்போட்டாங்கள் எண்டன். இப்ப தீத்தம் ஆடச் சாமி கடற்கரைக்கு ஊர்வலமா வாறதுக்கு ஆன்மீகக் காரணங்களை விடப் பெரிய அரசியல் சமூக பண்பாட்டியல் பொருளியல் சூழலியல் காரணியள் இருக்கெண்டு ஆச்சி சொன்னது ஞாபகத்துக்கு வந்தது.

அது வேற ஒண்டும் இல்லை இது எங்கட கடல்....எங்கட கடலை, எங்கட எங்கட கடல்வளத்தை, எங்கட கடல் தொழிலை, எங்கட கடல் எல்லையை நாங்கள் பாதுகாக்க வேணும் அதைச் சுத்தமா வைச்சிருக்க வேணும் எண்ட செய்தியைச் சொல்லுறது தான் தீத்தத்திருவிழாவில இருக்கிற முக்கியமான செய்தி. உதுக்காத்தான் எங்கட ஆக்கள் பரந்தாமனைக் கடலிலை பள்ளி கொள்ளச் செய்தவை அதாலதான் அவரும் மச்சாவதாரம் எடுத்தவர். உதுக்காகத்தான் தீத்தம் ஆடுறதை கடலிலை வைச்சவை, தெப்பத் திருவிழா எண்டு ஒண்டு வைச்சவை எண்டு எங்கடை அப்பு சொல்லுறவர் எண்டு சொன்னன்.

அது மட்டும் இல்லை அங்கை கடல்லை சாமியோட சேர்ந்து எல்லாரும் எந்தச் சமூக ஏற்றத்தாழ்வும் இல்லாம பெரியவன் சின்னவன் ஆண் பெண் எண்ட வேறுபாடில்லாமல் சமத்துவமா தீர்த்தம் ஆடுவினம். உதால சமூக உறவுகள் எல்லாம் மேம்படும் எண்டன். உது மட்டும் இல்லை நாங்கள் ஏன் பிள்ளையாரை ஊர்வலமாக் கொண்டு வாறம் எண்டதுக்கும் பெரிய சமூகக்காரணம் இருக்கு. அது என்னண்டால் உப்ப உங்கக் கன வருத்தம்வாதைக்காறர், நடக்க கிடக்க ஏலாததுகள், வயசு போன கிழடு கட்டையள், துடக்குத்துய்மைகாறர், பிள்ளைப்பெத்தவை, சாம்மத்தியப்பட்டவை எண்டு கனபேருக்கு கோயிலுக்கு வரேலாமல் இருக்கும்.

அப்படி வராம இருக்கிற ஆக்களுக்கும் அருள வேணும் எண்டு போட்டுத்தான் பிள்ளையார் இப்பிடி ஊர்வலமா தெருவால அவையின்ரை படலையடிக்கு வாறவர் எண்டு ஆச்சி சொல்லுறவ தெரியுமோ எண்டு கொண்டு திரும்பிப் பாக்கிறன் அவனைக் காணேல்லை. வெள்ளைக்காறனுக்கு விளக்கம் சொல்லப் போயிருப்பான் போல எண்டா வீட்டம்மா.

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.06.2023இல் வெளியிடப்பெற்றது.